Regd. No. M. 4900. 16-பக்கங்கள். தனிப்பிரதி விலை 0-2-0.

நமது இயக்க அச்சு வேலைகள் அனைத்துக்கும் சிறந்த இடம்
★
தமிழன் பிரஸ், ஈரோடு.

# குடி அரசு

நமது இயக்கப் புத்தகங்கள் அனைத்தும் கிடைக்குமிடம்
★
நாதன் கம்பெனி ஈரோடு.

வருட சந்தா உள்நாடு ரூ. 7-0-0. வெளிநாடு ரூ. 9-0-0.

மாலை 21 ஈரோடு 7-2-1948 சனிக்கிழமை மலர் 22.

## பெரியார் காந்தியாரைக் கொன்றவன் பெரியசாதிப் பார்ப்பனன்.

★

நான் நத்தூராம் வினாயகக் கோட்ஸைப் பூனாவில் மூன்று மாதங்களுக்கு முன்பு சந்தித்தேன். அவர் முஸ்லிம்களின் பரம விரோதியாகக் காணப்பட்டார். இந்தியாவிலுள்ள முஸ்லிம்களின் பிரஜாவுரிமைகள் பறிக்கப்படவேண்டிய அவசியம் குறித்து அவர் தர்க்கரீதியாக என்னிடம் வாதித்தார். தோழர் கோட்ஸ் உயர்சாதிப் பார்ப்பன வகுப்பைச் சேர்ந்தவர். ஹிந்து ராஷ்டிரா என்ற தீவிரத் தேசியப் பத்திரிகையின் ஆசிரியருமாவார் அவர். அவரது வாதமாவது:

இந்தியாவிலுள்ள முஸ்லிம்கள் பாகிஸ்தான் எய்தப்பெற ஜின்னாவையும் முஸ்லிம் லீக்கையும் ஆதரித்து வந்தனர். இப்பொழுது அவர்கள் பாகிஸ்தான் அடைந்து விட்டார்கள். எனவே அவர்கள் ஹிந்துஸ்தான் விட்டு வெளியேறிவிட வேண்டியதுதானே முறை. தாய்நாடு பிளவுண்டதற்கு இந்து சமுதாயம் தனது வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்ளப் போவதுறுதி. இந்தியா முஸ்லிம்களுக்கு விற்கப்பட்டு விட்டது.

மகாராஷ்டிரர்களின் பழங்காலக் கீர்த்திபற்றித் தோழர் கோட்ஸ் பேசுகையில் அவரது கண்களில் வெறியுணர்ச்சி தாண்டவமாடியது.

கோபக் கனல் பொங்க ஆத்திரக் குரலில் தோழர் கோட்ஸ் காந்தியாரைக் கொடூரமாகச் சபித்து, என்னை விட்டுப் பிரிந்தார். எதுவும் பேச எனக்கு நாவெழவில்லை.

இவ்வாறு தோழர் தாமன்கார் என்பவர், லண்டன் "ரெய்னால்ட்ஸ் நியூஸ்" பத்திரிகையில் குறிப்பிடுகிறார்.

**பெண்கள் பகுதி:**

# சுதந்தரம் வேண்டுமானால்......

★

(இந்திரா)

உரிமையை, மானத்தை, சுயமரியாதையை விட்டுக் கொடுக்கமாட்டான் எந்த மனிதனும். இது இயல்பு. இத்தனையும் காக்கப்படுதல் வேண்டுமானால், சுதந்தரம் வேண்டும். நாம் நம்மையே ஆளுதல் வேண்டும். நம்மிலும், கயவர்களோ, காலிகளோ, இருக்கலாமல்லவா? பொதுஜன மதிப்பிற்கும், அன்புக்கும், நம்பிக்கைக்கும் ஆளானவர்கள் கையில் செங்கோல் கிடைக்கப் பெறுதல் வேண்டும். சிறு பிள்ளை வளர்ந்ததும் குணம் மாறி விடுவது போல, ஆட்சிப் பீடம் ஆணவத்திற்கு இடமாகி, "அதிகாரம் என் கையிலிருக்கிறது, அடங்கி நடங்களடா!" என்று கூறும் நிலை ஏற்பட்டால்......! இது அரசியலில். பெண்களுக்குச் சுதந்தரம் வேண்டுமானால்........தண்ணீராகக் கருதப்படும் நிலை மாறுதல் வேண்டும். புகைக்கப் பிறந்தவர்கள் என்று கருதப்படும் நிலை மாறுதல் வேண்டும்.

விபசாரி, தட்டுவாணி, இன்னும் மக்கள் மன்றத்திலே கூறத்தகாதன கூறுகிறார்களே ஒழிய, வழுக்கி விழுந்தவள், ஒழுக்கங் கெட்டவள் என்றெல்லாம் முழக்கம் இடுகிறார்களே ஒழிய, வழுக்கி விழுந்தவனை, ஒழுக்கங்கெட்ட ஒருவனை, வெட்கக் கேடான நடத்தையுடையவனைக் குறிக்க என்ன சொல் இருக்கிறது. விபசாரி என்று கூறச்சொல் இருக்கிறது. ஆனால் அதற்கு ஆண்பால்? பெண் ஒருத்தி வழுக்கி விழுந்தால் பிரமாதப்படுத்தும் தோழர்கள் அவனுடன் வழுக்கி விழுந்தவரைப் பற்றி வாயசைப்பதே இல்லை! இந்த நிலை மாறவேண்டும். இதற்காக ஆண்களின் சிறுவிரல் கூட அசையாது. பெண்களே வழிகோல வேண்டும், இந்த இழி நிலையை மாற்ற. கற்பு பறிபோனவன் காரித் துப்பப்படுவதில்லை சமூகத்தில். கற்பு என்றாலே, பெண்களின் ஒழுக்க நிலை, என்ற அர்த்தம் தான் வழக்கிலே இருந்து வருகிறது. இன்னும் கூறவேண்டுமானால், எந்த ஆணும், பெண்ணும், கற்பு நிலையில் இருக்க முடியாது. சூழ் நிலையோ, சுற்றுச்சார்போ, கெடுத்திருக்கவேண்டும். அவரவர் மனமே கூறும், அவர்களுக்கு. கற்பு பற்றி பல மணிநேரம், பழங் காப்பியங்களை எல்லாம் துணைக்கழைத்துப் பேசியவர், பலரின் பாராட்டுரைக்குப் பிறகு வீடு சென்று மனைவியுடன் பேசுவார். பின்பு............அவள் அவருக்கு இரண்டாவது வேட்டையாக இருக்கலாம், அல்லது எத்தனையாவதாகவோ இருக்கலாம். இந்த நிலை மாறவேண்டும். ராமகாதையில், பலநாள், அசோகவனத்திலிருந்து திரும்பிய தன் மனைவி மீது பிறர் சந்தேகிக்கக் கூடாதே என்று தீக்குழியில் இறக்கிய பெருமகனார் சிறிது சிந்தித்திருக்கக் கூடாதா? தன் தந்தைக்கு எத்தனை மனைவியர் என்று. சீதைக்குத் தன் கணவன் மீது அய்யம் இருந்தால் "அன்பரே! தங்கள் மீது எனக்கு இருக்கும் அய்யத்தைப் போக்க, எரிமூட்டி "என் உள்ளமோ, உடலோ, வாக்கோ, மாசுபட்டிருந்தால் எரித்து விடுக" என்று கூறி இறங்குங்கள்" என்று கூற முடியுமா? கூறுவது முறையா? என்று கேட்கும் சூழ்நிலை, பெண் அடிமை என்பதை விளக்கவில்லையா? பிரதமரின் பாராட்டுரைகளுக்கு, பாதுகாப்புக்கு உரியதான சாத்திரங்கள் உபநிஷத்துகள் இதைத்தவிர வேறு எதைக் கூறுகிறது. சாத்திரங்கள் பெண் அடிமையை வலியுறுத்த. சட்டங்கள், அதைத் தாங்க. பெரிய கைகள் உறுதிகூற, பெண்கள் புழுக்களாக, பூனைகளாக, வேரோடிப்போனமரங்களாக இருக்கின்றனர்.

"ஆண்கள் தங்கப் பாத்திரம். தொட்டால் தீட்டு. ஆனால் துடைத்தால் போதும். பெண்கள் மண்சட்டி. தொட்டால் தீட்டு. கழுவினாலும் போகாது. உடைத்து குப்பைத் தொட்டியில் தான் போடவேண்டும்" இது இன்றுள்ள சூழ் நிலை. இந்தச் சூழ்நிலைமாற "பெண்களும் தங்களைத் தங்கப் பாத்திரங்களாகக் கருதிக்கொள்ள வேண்டும்.

# மூட நம்பிக்கை!

(என். வி.)

★

[முன்னுரை:—இதில் கூறப்பட்டுள்ளவை யாவும் உண்மையாக நடந்தவைகளே. ஆனால் இதில் காணப்படும் மக்களின் பெயர்கள் மட்டும் புனைப் பெயர்கள். முன்னேற்றத்துக்கு முட்டுக் கட்டையாக இருக்கும் மூடநம்பிக்கைகளுக்குச் சாவு மணி அடித்தால் ஒழிய நம் சமூகம் முன்னேற்றமடைய முடியாது! அத்தகைய மூடநம்பிக்கையின் ஒரு சிறு பகுதியை இந் நிகழ்ச்சி எடுத்துக் காட்டும்.]

"அண்ணா! அண்ணா!" என்று கதவைத் தட்டும் ஆண் குரல் கேட்டது.

"யார் அது?" என்று படுக்கையிலிருந்து எழுந்து தன்வீட்டின் கதவைத் திறந்தான் அண்ணாமலை.

அன்பரும் அவரது மனைவி அறிவழகியும் எதிரே நிற்பதைப் பார்த்தான். உடனே "வாருங்கள், வீட்டுக்குள்ளே வாருங்கள்" என்றான். அவர்கள் வெளியிலேயே நிற்கவே அன்பரை நோக்கி ஆச்சரியத்துடன்,

அண்ணாமலை:- "இந்த நடுநிசியில் எங்கே இவ்வளவு தூரம் வந்தீர்கள்? என்ன செய்தி"

அன்பர்:- "நமது குழந்தை 'இளங்கோ' வுக்கு வயிற்றுவலி மிகவும் அதிகமாகி விட்டது. வயிறுவேறு வீங்கி விட்டது. வலியினால் கதறுகிறான்."

அண்ணா:- "சரி, உடனே சொல்லுங்கள். என்ன வேண்டும்?"

அன்பர்:- "உங்கள் வீட்டுக் குழந்தைக்கு வாங்கி வைத்திருப்பீர்களே, 'பெரளி' எண்ணெய். அது கொஞ்சம் தேவை."

அண்ணாமலை உடனே உள்ளே சென்று "அம்மா! அம்மா!" என்று தன் தாய் 'அரசியாரைக்' கூப்பிட்டான். வெளியில் நின்ற அறிவழகியும்

[தொடர்ச்சி 14ம் பக்கம்]

# இழிவுதரும் சட்டங்களை இன்றே ஒழி!


ரோஜா முத்தையா

# எனது பம்பாய்ப் பயணம்.

★

பம்பாய்க்கு எனது சொந்த வேலையாகப் போவதென்று முடிவு செய்தேன். போகிறது போகிறோமே, அங்கு தமிழர்கள் வாழும் தாராவி என்னும் பகுதிக்குச் செல்லவேண்டும்; அங்குள்ளவர்களிடம் பழக வேண்டும் என்ற ஆசை என்னைத் தூண்டியது. உடனே அங்குள்ள இரண்டு தோழர்களுக்குக் கடிதம் எழுதினேன். அவர்களையும்கூட எனக்கு நேரில் தெரியாது. அவர்கள் இருவருடைய விலாசமும் எனக்குத் தெரிந்த காரணத்தால் எழுதினேன். அதில் ஒரு தோழர் எஸ். பெரியசாமி என்பவரிடமிருந்து உடனே பதில் பறந்தோடி வந்தது. என் வரவை அன்புடன் வரவேற்றுக் கடிதம் எழுதியிருந்தார். அங்குள்ள **திராவிடநாடு பகுத்தறிவு** நிலைய நான்காவது ஆண்டு விழா 25-1-48 தேதி நடைபெறுகிறதாகவும் அதில் கலந்து கொள்ளும் முறையில் வந்து சேரவேண்டும் எனவும் எழுதியிருந்தார். அதே கடிதத்தில் "தாங்கள் வந்தால் தங்கியிருப்பதற்கும், உணவு வசதிக்கும் **மாதுங்கா** என்னும் பகுதியில் ஏற்பாடு செய்யவா?" என்று கேட்டிருந்தார். மாதுங்கா என்னும் பகுதி பெரும்பாலும் தென்னாட்டுப் பார்ப்பனர்கள் வாழும் இடம் என்று அறிந்தேன். உடனே அவருக்கு "அதெல்லாம் முடியாத காரியம். தங்களோடு ஒருவனாகத்தாங்கள் வாழும் இடத்தில் தங்களோடவே இருக்கவும், தங்களுடனேயே உணவு கொள்ளவும் தான் நான் சம்மதிக்க முடியும்" என்று கண்டிப்பாக எழுதி விட்டேன்.

பிறகு நான் சென்னை சென்று அங்கிருந்து **23-1-48** தேதி இரவு பம்பாய் மெயிலில் புறப்பட்டேன். ரயில் சென்ட்ரல் ஸ்டேஷன் பிளாட்பாரத்திற்கு வருவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்னதாகவே நான் பிளாட்பாரம் போய்ச் சேர்ந்தேன். சென்ட்ரல் ஸ்டேஷன் பிளாட்பாரத்தில் ஏராளமான பேர்வழிகள் இருக்கிறார்கள். அவர்களது வேலை ரயில் பிளாட்பாரம் வந்து சேர்ந்தவுடன் நமது படுக்கைகளைக் கொண்டு போய் "சாமான்களுக்கு மாத்திரம்" என்று எழுதி அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள மேல் பலகையில் நம்படுக்கையை விரித்துக் கொடுத்து ஆளைப்போல் 4 அணா, 8 அணா, ஒரு ரூபாய் என்றுகூட வாங்குகிறார்கள். சாமான்கள் வைக்கும் இடத்தில் நாம் போய்ப் படுத்துக் கொள்வது நியாயமல்ல என்றுதான் தோன்றுகிறது. ஆனாலும் மூன்றாம் வகுப்புப் பிரயாண நிலைமையை எண்ணும் போது தர்ம நியாயம் பார்த்துக் கொண்டிருக்க முடிவதில்லை. நானோ இரண்டு இரவு, ஒரு பகல் ரயில் பிரயாணம் செய்யவேண்டியிருப்பதால் நானும் ஷை பேர்



வழிகளில் ஒருவரிடம் எனது படுக்கையைக் கொடுத்துச் சவுகரியமாக ஒரு பலகையில் படுக்கையை விரித்துப் போட்டுக் கொண்டேன். என்னைப் போலவே மற்றும் சில பிரயாணிகளும் வசதி செய்து கொண்டார்கள். மற்றபடி ரயில் சென்னை சென்ட்ரல் ஸ்டேஷனை விட்டுப் புறப்படும் பொழுதே ஒவ்வொரு மூன்றாவது வகுப்பு வண்டியிலும் உட்காரக்கூட இடமில்லாமல் பலர் நின்று கொண்டு வரவேண்டிய நிலை தான் இருந்து வருகிறது.

இந்த நிலை ஒழிய ஏதாவது வழி உண்டா என்று யோசித்துக் கொண்டே பிரயாணம் செய்தேன். **"இனிமேல் நமது மந்திரிமார்களும், மேல் அதிகாரிகளும் மூன்றாவது** வகுப்பு வண்டியில் தான் பிரயாணம் செய்யவேண்டும்" என்று விதி ஏற்படுத்தினால் ஒழிய மூன்றாவது வகுப்புப் பிரயாணிகளின் குறை நீங்காது என்ற முடிவிற்குத்தான் என்னால் வர முடிந்தது.

ஏன் இவ்வாறு கூறுகிறேன் என்றால், எங்கள் ஊரில் நாங்கள் குடியிருக்கும் பிரதேசம் புதிதாக வீடுகள் கட்டப்பட்டுள்ள இடமாகும். இன்னும் எங்கள் பகுதிக்கு ரோட், விளக்கு, தண்ணீர் வசதி முதலானவைகள் எதுவுமே செய்யப்படவில்லை. இந்நிலையில் எங்கள் பகுதியில் ஒரு பெரிய வீடு கட்டியவர் ஒருவர் வெகு புத்திசாலித்தனமாக முனிசிபல் கமிஷனர் அவர்களுக்கு வாடகைக்கு அந்த வீட்டைக் கொடுத்திருந்தார். பாருங்களேன்! மெயின் ரோட்டிலிருந்து ஸ்பெஷலாக அந்த வீட்டுக்கு மட்டும் தண்ணீர்க் குழாய் வைக்கப்பட்டு விட்டது. இதிலிருந்து உங்களுக்கு நான் எடுத்துக் காட்ட விரும்புவதெல்லாம் நமது கஷ்ட நஷ்டங்களைச் சர்க்கார் உணரவேண்டுமானால் எடுத்துச் சொல்வதனால் மட்டும் போதாது; சர்க்கார் சம்பந்தப்பட்டவர்களும் அந்தக் கஷ்ட நஷ்டத்தில் பங்கு கொள்ளும்படி செய்தால் உடனே அதற்குப் பரிகாரம் ஏற்பட்டே தீரும் என்பதை விளக்கவேயாகும்.

ரயில் ஒரு ஸ்டேஷனில் போய் நின்றதும் ரயிலில் ஏற முயற்சிப்பவர்களுக்கும், கதவுப் பக்கம் உட்காரக்கூட இடமில்லாமல் நின்று கொண்டிருப்பவர்களுக்கும் "பெரும் வாய்ப்போர்" நிகழும். முடிவில் எப்படியும் சிலர் உள்ளே நுழைந்து விடுவார்கள். மற்றும் சிலர் ஜன்னல் வழியே உள்ளே வந்து சேர்ந்துவிடுவார்கள். பெட்டி படுக்கையுடன் வருகிறவர்கள் உள்ளே வந்து சேர்ந்ததும் அண்ணாந்து பார்ப்பார்கள். உயிருள்ள "லக்கேஜ்"களாகிய நாங்கள் படுத்திருப்பதைக் காண்பார்கள். சற்று பொறாமை கலந்த கோபம் வருவது உண்டு. ஆனாலும்பொறுத்துக் கொள்வார்கள். பிறகுபெஞ்சுக்குக் கீழேயாவது சாமான்களை வைக்கலாம் என்று கருதி முயற்சிப்பார்கள். அங்கு ஏற்கனவேயே டிக்

(தொடர்ச்சி 14-ம் பக்கம்)

# படிப்பும் பதவியும் பார்ப்பனீய உரிமையா?

# ஏனோ இந்த சுயராஜ்ஜியம்?

(நைந்த மாணவன்)

(சென்ற வாரத்தொடர்ச்சி)

ஹாஸ்டல். வாழ்க்கையில் வாடிப் படிக்க வசதியற்று கிடக்கும் ஏழை மாணவர்கள் தங்கி உண்டு, உறங்கி, உல்லாசமாகப் படிக்க ஏற்படுத்தப்பட்டது. இங்கு அல்லல்கள் இல்லையா? தலைநகரான சென்னையிலே உள்ள ஹரிஜன் ஹாஸ்டலை நிர்வகிக்கக் கனம் ஸ்பீகர் அவர்களால் கூட நன்கொடை கொடுக்கப்படுகிறது. அத்தகையஹாஸ்டலில் மாணவர்கள் மாடாக்கப்படுகின்றனர். கல்வியை அவர்கள் கருத்தில் பதியவைக்க நேரமேது? இடவசதியோ அந்த இல்லம் கொள்ளும் மாணவர்கள்போல் இருமடங்கு என்றால்............? விளக்கு ஒன்று. முன்னே உட்காருபவர்கள் மாத்திரம் படிக்கலாம். வேலையோ மும்முரம். இராட்டையா? அது குடிசைத் தொழில் அபிவிருத்திக்காக காட்டப்படும் பரிவு எனலாமே!

பின்என்ன? எனலாம் நீங்கள்.

படிக்க வந்த இடத்தில் மாணவர்கள் எதிர்பார்த்த எண்ணத்திற்கு மாறாக அவர்கள் போக்கு திருப்பப்படுகிறது, வேண்டா வெறுப்பான வேலைகளின்மேல். காய் கிழங்கு அரிதல்; அரிசியில் கல் பொறுக்குதல். ஹாஸ்டலைத் தூய்மையாக வைத்துக் கொள்ளும் சகல வேலையும் மாணவர்களே செய்தல். பள்ளியில்லாத ஓய்வு நாட்களில் விறகுக்காக (சுள்ளி) க்யூவில் நிற்றல். ரேஷன் விறகு, அரிசி, எண்ணெய் இவைகளை வாங்கி வருதல், இன்னும் மானேஜருக்கு எத்தனையோ அடிஸன் வேலைகள், மாணவர்கள் பிற்காலத்தில் தங்கள் வாழ்க்கையை செவ்வனேநடத்துவதற்கு; அவர்களுக்குக் கொடுக்கப்படும் அப்பியாசம் எனலாம் மற்றவர். அவர்கள் வீட்டிலிருந்தாலே இத்தகைய வேலைகள் தானாக வருமே இந்த ரேஷன் காலத்தில். இதைவிடுத்து ஹாஸ்டலில் சேருவானேன். அரசாங்கத்தார் பணத்தை அனாவசியமாகச் செலவழிப்பானேன்? என்று கேட்க ஆசைப்படுகிறேன் அத்தகையவரை. மாணவர்கள் இவ்வளவிலும் சிக்கித் துன்புற்று, இங்கு இன்புறமாட்டோம் எனமுடிவு கட்டி இந்த ஹாஸ்டலிலிருந்து தப்பி மற்றொரு ஹாஸ்டலை நாடினால் நல்லது என்று நினைத்து அதற்காக விசாரித்துக் கொண்டிருக்கின்றனர்.

கல்வியறிவு இல்லாது செய்கிறது வெள்ளை ஏகாதிபத்தியம் என்று இதற்கு முன் சொல்லிய அன்பர்கள் ஆட்சியிலே இந்தக் கோலம். கனம் சிவசண்முகமே! உங்கள் சித்தம் திகைக்கவில்லையா? சாமி சகஜானந்தமே! உன் இரத்தம் கொதிக்கவில்லையா? எங்கே ஹரிஜன் அப்லிப்ட்டும் அதனை நடத்தும் அதிகாரியும்? இப்படியிருக்க, ஏழை மாணவர்கள் தகுதி திறமையில் எப்படி மற்றவர்களைவிட அல்லது அவர்கள் போல கல்வி அறிவுள்ளவர்களாய் இருக்க முடியும்? திரு விஸ்வநாதம் குமாரர் தான் இந்த ஏழைகளுடன் இத்தகைய ஹாஸ்டலிலிருந்து படித்து இவர்களைப் போல மார்க்குதான் எடுக்கட்டுமே? பார்ப்போம் என்று கேட்கிறேன்.

* *

"ஆட்சியில் ஆவணத்தில் அன்றி மற்ற யலார் தங்கள் காட்சியில்மூன்றில் ஒன்று காட்டுவாய்" இது பித்தம் பிடித்த கிழவன் பிறவியில் உயர்ந்தவர் என்று கூறப்படும் திருநாவலூராரை என் அடிமையென்று கூறி வாதாடிய போது அவரை நோக்கி நீதி மன்றத்தார் விடுத்த கேள்வி. அதே கேள்வியை எமக்கும் விடலாம் என்பதற்காகவே பலபன்னிறுத்தி இவைகளை முன்னிறுத்தினேன்.

இத்தகைய இன்னல்களுக்கிடையே ஏழைத்தாழ்த்தப்பட்டவர்கள்திண்டாடுகிறார்கள். ஹரிஜன் அப்லிப்ட் திண்டாட்டத்தைத் தீர்த்ததா? தீர்க்கத்தான் ஏதாவது முயற்சி எடுத்ததா? ஆகவே ஆட்சியாளரே! ஆவன செய்யுங்கள் என்று கோருகிறேன். பல அல்லல்களிடையேயும் ஆண்டவையை எதிர்பார்த்த நந்தன்போல். ஆனால் அவன் கதி எமக்கும் வராது இருக்க வேண்டும்.

இவ்வளவு தானே என்பவருக்கு மேலும் இதோ ஒன்று.

* *

சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. பொது இடங்களில் ஹரிஜனங்களைச் செல்ல விடாது அல்லது அனுபவிக்க முடியாதபடி தடுத்து அவர்களை அவ்விடங்களில் (குறிப்பாக ஹோட்டல்களில்) வேற்றுமை காட்டி நடத்துபவர்களைத் தண்டிக்க. ஆனால் ஜாதி வெறிசாடுகிறது. ஏழைகளை அந்த இடத்தில் நெருங்காதே! என்று எக்களி கொட்டுகிறது! தெரியுமா? ஆட்சியாளருக்கு! அவர்கள் கண் முன் நடக்கும் அதே அட்டூழியங்களில் நானே அனுபவித்ததில், இன்னும் நிலைபெற்று நடந்து வருவதில் உதாரணத்திற்கு ஒன்று.

செங்கற்பட்டை அடுத்துள்ள சாலவாக்கம் கிராமத்தில் ஒரு டீ கடை. நிர்வாகி ஒரு உயர்ஜாதி இந்து. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அங்கு டீ கிடையாது. வேண்டுமானால் அல்லது விரும்பினால் பல நாட்கள் கழுவாது வெளியே கொம்பில் மாட்டப்பட்டுள்ள தகர டம்ளரில் தான் ஊற்றுவர். கேட்பாருண்டா? தப்பி என் போன்றார் கேட்டால் தம்பி! இது பட்டணம் அல்ல. இங்கு உன் கேள்விகள் அனைத்தையும்மூட்டை கட்டிக் கொண்டு ஓட்டம் பிடிக்கவேண்டும். மூட்டை கட்டத் தவறினால் உன் கதி உன்னுடைய விதியைப்பொருத்தது என்ற ஆணவப் பதில் தானே கிடைக்கிறது. கேட்கிறேன் சட்டம் என்ன ஆச்சு? என்று. அச்சுறுத்தமாட்டீர், உடனே ஆவன செய்வீர் என்ற நம்பிக்கையுடன்.

இது ஒரு ஊரில், இதோ வேறு ஊர்.

* *

கனம் ஜே. சிவசண்முகம் சின்னாட்களுக்கு முன்பு அவர் தம் தலைமையில் கோயில் நுழைவு செய்யப்பட்ட பெருநகர் என்னும் ஊர். ஊராரின் போக்கு உலுத்தர்கள் ஆட்சி நடக்கிறது என்ற அளவிலே இருக்கிறது.

பறையர்கள் ஏற்படுத்திய சங்கமாம்; அதைக்கொண்டு கோயில் நுழைவாம். சங்கத்தைப் பங்கப்படுத்திப் பாழ்படுத்தாது எங்கள் அங்கத்தை இப்புவியில் தங்கவிடோம் என்று ஆர்ப்பரிக்கின்றனர் ஜாதி இந்துக்கள். யார் ஆட்சியில்?" பறையருக்கும் இங்கு தீய புலையருக்கும் விடுதலை!" என்ற விடுதலை முழக்கத்தைக் கைக்கொண்டவர்களின் ஆட்சியில்!! இரவில் வெளியே செல்லப் பயம். சொன்னோம் இது சுதந்தர சர்க்கார் அப்பனே! ஏழை ஹரிஜனங்களை இச்சிப்பதை இவர்கள் பொறுக்கார்! ஆகவே ஏன் இந்த எதிர் முகாம் ஏழையெனும் எங்கள் மீது என்று!

சுதந்தரமாம்! சுயராஜ்யமாம்! உங்களுக்குத்தான் அது சொந்தம் என்று எண்ணாதே? கேள்! நிலம் இல்லாத நீசர்களுக்கு அவ்வளவு சுதந்தரமானால் நிர்வாகத்தை நடத்தும் அவர்கள் அபிமானிகளாகிய எங்களுக்கு எவ்வளவு அதிகாரம் இருக்கு தெரியுமா? அளக்கப்பார்க்கிறாயா? ஆபத்து! இது ஜாதி இந்துக்களின் சல்லடம் கட்டிய பேச்சு.

யாரோ மந்திரி வந்து கோயில் நுழைவு செய்தாருன்னு இப்படிச் செய்யலாமாங்க? நிலத்தைப் பிடுங்கிக் கிட்டா பிழைப்பது எப்படிங்க? கருணை செய்யுங்க.

இது ஏழையின் குரல் அந்த இந்துக்கள் எதிரில்.

எம்பா கடவுளைக்கோயில் திறந்து காட்டினாரே—அவரே உங்களுக்குப் பிழைப்பதற்குக் காரணமும் சொல்லுவார் என்ற ஏளனப்பதில், வெறியாட்

(தொடர்ச்சி 12-ம் பக்கம்)

# சன்னப்பட்டினமே, சென்னைப்பட்டணமாயிற்று

★

சென்னை நகரம் ஏற்பட்டு 300வருடங்கள் ஆகின்றன. அதாவது 1639-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 22-ஆந் தேதியன்று, பழவேற்காட்டிலிருந்த கிழக்கிந்திய கம்பெனியின் ஏஜண்டான பிரான்விஸ்டே என்பார் தாமாலாவே ஆங்கடா என்பவரிடமிருந்து பெற்ற 3 மைல் நீளமும் $1\frac{1}{2}$ மைல் அகலமும் உள்ள நரி மேடு என்ற இடம் தான் இன்று 30 சதுர மைல் விஸ்தீரணத்துடன் தென் இந்தியாவின் தலை நகரமாகவும், இந்தியாவின் சிறந்த நகரங்களுள் ஒன்றாகவும் விளங்கிக் கொண்டிருக்கிறது

### கிறிஸ்துவ சகாப்தத்துக்கு முன்.

சென்னை நகரம் தோன்றா முன், கிறிஸ்துவ சகாப்தம் தொடங்கிய கால முதல் இப்போது மயிலாப்பூராயிருக்கும் இடம் தான் பிரசித்திபெற்ற துறைமுகமாயிருந்தது. இதனை சில காலம் மலியாப்பூர் என்று வழங்கியதாகவும் தெரிகிறது. கிரேக்க பூகர்ப்ப சாஸ்திரியாகிய டால்மி இதன் அசல் தமிழ்ப் பெயராகிய மயிலார்ப்பூ என்பதன் சிதைவாகிய மயிலார்ப்போன் என்று தம் நூலில் குறிப்பிட்டுள்ளார். இதில் தான் திருவல்லிக்கேணி ஒரு பகுதியாகச்சேர்ந்திருந்தது. அங்குள்ள கோயில்கள் பழைய தொண்டைமான் மன்னர்களால் கட்டப்பெற்றவை. ஆழ்வார்களும், சைவ சமயாசாரியர்களும் இந்த வைஷ்ணவ, சைவக் கோயில்களைப்பற்றிப் பாடியிருக்கின்றனர். இதேபோல வடகோடியில் திருவொற்றியூர் பழய ஊராகும். அதன் கோயிலும் தேவார கர்த்தாக்களால் புகழ்ந்து பாடப்பட்டது.

### சிறு சிறு கிராமங்கள்.

புழலேரிக் கரையிலுள்ள சிறு கிராமம் தான் அந்தக்காலத் தொண்டைமான்களின் தலை நகரமாக விளங்கியதாம். மயிலார்ப்புக்கும் மேற்படி கிராமத்திற்கு மிடையில் கடற்கரைக் கிராமங்களாக, செல்பாக்கம் (இப்போதைய சேப்பாக்கம்), நுங்கம்பாக்கம், புரசப்பாக்கம் ஆகியவை தூர தூரச் சிறு கிராமங்களாக இருந்தன.

### சென்னை பட்டினம் வந்த விதம்.

இப்போது சென்னை யிருக்குமிடம் முன்னர் வந்த வாசி மாகாணத்தைச் சேர்ந்ததாகும். அப்போது வந்த வாசி மாகாணம் என்று ஒன்றிருந்தது. பழவேற்காட்டிலிருந்து கூடலூர் வரை அது வியாபித்திருந்தது. இதனுடைய கவர்னர் தான் தாமர்லா வேங்கடா என்பவர். இவர் காளஹஸ்தி ஜமீன்தார்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர். இவருக்கு அய்யப்பா என்று ஒரு சகோதரர் இருந்தார். இவர் பூவிருந்த வல்லியின் தரப்தாராக இருந்தார். இவர் பூவிருந்தவல்லியிலேயே குடியிருந்தார். இந்தச் சகோதரர்களுடைய தந்தையின் பெயர் சன்னம நாய்க்கர். தம் தந்தையின் பெயரால் அய்யப்பா ஒரு சிறு ஊரை உண்டாக்கினார். அந்த ஊருக்குத் தம் தந்தையின் பெயரையே வைத்துச் சன்னப்பட்டணம் ஆக்கினார். பிறகு அப்பதம் மருவி இன்று சென்னை பட்டினமாக விளங்குகின்றது.

### மதராஸ் ஆனது எப்படி?

கடற்கரை போரத்தில் மதரேசன் என்ற பெயருடைய கிறிஸ்தவச் செம்படவன் ஒருவன் இருந்தான். அவனுக்கு ஒரு குப்பம் சொந்தமாக இருந்தது. அந்தக் குப்பத்தைப் பிரான்விஸ்டே என்பவர் பேரிதிம்மப்பா என்பவருடைய உதவியால் பெற்று, அங்குஒரு தொழிற்சாலை கட்டி அதற்கு மதராஸ் பட்டணம் என்று பெயர் வைத்தனர்.

பிரான்விஸ்டே முதன் முதலாக வாங்கிய சிறு நிலம் கூவம் ஆற்றுக்கும் எழும்பூர் ஆற்றுக்கும் இடையிலிருந்த பிரதேசம். இதனை அக்காலத்தில் நரிமேடு என்று அழைத்தனர். இது எதற்கும் உதவாத நிலமாக அந்தக் காலத்தில் கருதப்பட்டது. இந்த நிலத்தைப் பிரான்விஸ்டே பெற்று அங்கு தான் இன்றைய சென்னை நகரத்திற்கு அஸ்திவாரம் போட்டார். அதாவது செயிண்ட் ஜார்ஜ் கோட்டை கட்டப்பட்டது. அது முதல் நாளடைவில் கொஞ்சம் கொஞ்சமாக இந் நகரம் வளர்ந்து பெருகி இன்று இந்தியாவின் முக்கிய நகரங்களுள் ஒன்றாகி விட்டது. இந்தியாவிலுள்ள இதர நகரங்களனைத்தையும் பல விஷயங்களிலும், உலகிலேயே மிகப் பெரிய நகரான லண்டனைவிட சில விஷயங்களிலும் முன்னணியில் நிற்கிறது நமது சென்னை நகர்.

### முதல் ஆட்டோ மாட்டிக் டெலிபோன் சென்னையில்தான் ஏற்பட்டது.

1881-ல் இங்கேதான் முதன் முதல் டெலிபோன் மாற்றம் ஆபீஸ் கட்டப்பெற்றது. பொஸாட்டோ ஹோட்டலுக்கு எதிரே, பிளாக்கர்ஸ் ரோட்டில் இருந்தது. அந்த ஆபீஸில் 1910-லே 350 சந்தாதாரர்கள் தாமிருந்திருக்கிறார்கள். 1881-க்கும் 1890-க்கும் இடையில் அய்ரோப்பாவிலேயே மிகச் சில ஊர்களுக்குத்தான் டெலிபோன் வந்திருந்தது. 1922-ல் 1300 சந்தாதாரர்கள் சேர்ந்தார்கள். 1925-ல் புதுக் கட்டிடம் கட்டப்பெற்றது. இந்தியாவிலேயே முதன் முதல் 'ஆட்டமாட்டிக்' (தாமாகவே வேலை பெய்யும்) டெலிபோன் இயந்திரம் ஸ்தாபிக்கப் பெற்றது சென்னையில்தான்.

### ஏகாம்பரேகவரர் கோயில் கட்டியவர்.

17-வது நூற்றாண்டின் கடைசியில் ஆலங்கத்தா பிள்ளை என்பவர் ஈஸ்ட் இந்தியா கம்பெனியின் பிரதம வியாபாரியாக இருந்தார். இவரது பெயர் தான் திருவல்லிக்கேணியிலுள்ளதோர் தெருவிற்கு இடப்பெற்றிருக்கிறது போலும். இவர்தான் தங்கசாலைத் தெருவிலுள்ள ஏகம்பரேசுரர் கோயிலைக் கட்டினார். 1710-ம் வருடத்திலே, தாமஸ்பிட் என்பவர் வரைந்த சென்னை நகரப் படத்தில் இக் கோயில் காணப்படுகிறது. 1710-ல் தங்கசாலைத் தெருவிற்கு சாயக்காரத் தெரு என்று பெயர்.

1673-க்கு முன்னாலேயே, இப்பொழுதுள்ள ஹைகோர்ட்டின் தோட்டத்தில் சென்ன கேசவப் பெருமாள் கோயில் இருந்தது. 1757-ல், ராணுவ அதிகாரிகள் இதனைத் தரை மட்டமாக்க விரும்பினர். அவர்களுக்கு அந்த இடம் தேவையாக இருந்தது. ஆனால் அப்போதைய சர்க்கார் இந்துக் கோயில்களைக் காக்க விரும்பினர். 1762ல் பெத்து நாய்க்கன் பேட்டையில், சைனா பஜார் ரோட்டுக்குத் தெற்கே, முன்பிருந்த கோயிலின் பரப்பளவிற்குச் சரியாக இடம் கொடுக்கப் பெற்றது. அங்குள்ளவர்கள் 1766-ல் ஒரு கோயில் கட்டினார்கள். அப்பொழுது சைவர்களும் வைஷ்ணவர்களும் இருந்தபடியால், அங்கு சென்ன கேசவப் பெருமாள், சென்ன மல்லிகேஸ்வரர் என்று இருகோவில்களாகக் கட்டப் பெற்றன.

காசி வீரண்ணா என்ற இந்து வியாபாரி 1680-ல் முத்தியால் பேட்டையில் முஸ்லிம்களுக்காக ஒரு தொழுமிடம் கட்டிக் கொடுத்தார்.

அக்காலத்தில் இந்து கோவில்களில் உற்சவங்களின்போது, ஈஸ்ட் இந்தியா கம்பெனி சர்க்கார், கோயில் மரியாதையாக, தம் படைகளை அணிவகுத்து அலங்காரமாகப்போக உத்திரவிட்டிருந்தனர். அதைப் பார்க்கப் பொறாத பிஷப்காரி என்ற பாதிரி 150 பேர்களிடம் கையெழுத்து வாங்கி, சர்க்கார் விக்கிரக ஆராதனைக்கு உடந்தையாக இருக்கப்படாது என்று மகஜர் அனுப்பினார்.

அதற்கு சர்க்கார் காரியதரிசி 'மகஜர் அனுப்பியவர்களின் மனப்பான்மையை ஆதரிக்க கவர்னர் தயாராக இல்லை. அதிகம் ஆத்திரமடைந்தவர்களைச்

(தொடர்ச்சி 12-ம் பக்கம்)

# ஈரோடு காணாத இந்து-முஸ்லிம் கலவரம்.

## நாசமடைந்த பொருள்கள் நான்கு லட்ச ரூபாய்.

★

ஈரோடு. 30-1-48.

இன்று மாலை 6 மணியளவில், உலகப் புகழ் வாய்ந்த பெரியார் காந்தியார், உலுத்தன் ஒருவனால் சுடப்பட்டிறந்தார் என்ற செய்தியைக் கேட்டுப் பரபரப்படைந்த பொதுமக்கள் கூட்டம், இந்நகர் கடைத்தெருவின் நடுநாயகமாய் விளங்கும் மணிக்கூண்டின் அருகில், மேலும் செய்தியைத் தெரிந்து கொள்ளத் துடிதுடித்தவராய்க் கூடி நின்றனர். $7\frac{1}{2}$ மணிச் செய்தியில் காந்தியாரைச் சுட்டவன் "அனேகமாக ஒரு இந்துவாக இருக்கலாமென்று நம்பப்படுகிறது" என்று அறிவித்த செய்தி "முஸ்லிம்தான் இந்துவாக வேஷம் போட்டிருக்க வேண்டும்" என்ற மாறுபட்ட கருத்து விரைவில் பரவுவதற்கு ஏதுவாக இருந்தது. இந்த மாறுபட்ட கருத்தினால் அவ்விடத்தில் நின்ற ஒரு முஸ்லிம் வாலிபன் தாக்குதலுக்கு உள்ளானான். அவன் தொப்பியைப் பிடுங்கி தீயில் பொசுக்கி அவனைக் காலால் உதைத்துச் சாத்தியிருந்த ஒரு கடையின் ஓரத்தில் அணைத்து மேலும் தாக்கியது ஒரு சிறு கும்பல். இந்தச் செய்தி பக்கத்தில் இருந்தபோலீஸ் ஸ்டேஷனுக்குத் தெரியவே போலீசார் விரைந்து வந்து அச்சிறுவனை மீட்டு ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்றனர். அதன்பிறகு அவ்விடத்திலேயே 4 5, முஸ்லிம்களின் தொப்பிகள் தீக்கிரையாக்கப்பட்டன. $8\frac{1}{2}$ மணியளவில் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து ஊருக்குள் வந்த சில முஸ்லிம்களும் தாக்கப்பட்டு அவர்களுடைய தொப்பிகளும் தீக்கிரையாக்கப்பட்டன.

பின் 9 மணியளவில் ஒரு பிரமாண்டமான கூட்டம் [சுமார் 10000] சுல்தான் பேட்டையை வளைத்துக் கொண்டு 4, 5, முஸ்லிம் வீடுகளை இடித்துவிட்டுப் பொருள்களையும் கொள்ளையடித்து வீடுகளுக்குத் தீயும் வைத்தது. இச் செய்தியை அறிந்து போலீஸ் சூப்பரண்டெண்ட், இன்ஸ்பெக்டர், கான்ஸ்டேபிள்களோடும், பல அரசியல் கட்சித் தலைவர்களும் ஸ்தலத்திற்கு வந்தனர். கலவரஞ் செய்யும் "மத வெறியர்களைக் கைகூப்பி வணங்கிக் கெஞ்சினர். நெருப்பணைக்க வந்த வண்டியும் தாக்கப்பட்டுத் தடுக்கப்பட்டன. அதிகமான போலீஸும் இல்லை, மிலிட்டரியும் இல்லை. அதிகாரிகள் என்ன செய்ய முடியும்? மிரட்ட வழியில்லாததால் கெஞ்சுதல் அதிகமாயிற்று. எப்படியாவது போலீசார் போய்விட்டால் போதும் என்று கருதிய "வெறியர்கள்" கலைவதாகப் பாசாங்கு செய்து 12 மணியளவில் கலைந்து சென்றனர். போலீசாரும் திரும்பினர்.

விடியற்காலம் 4 மணியளவில் உள்ளூர் இடுகாட்டை இடித்துத் தகர்த்து அங்கிருந்த கட்டிடத்தையும் தீக்கிரையாக்கிய ஒரு பெரிய கூட்டம் காவேரி யாற்றங்கரையிலுள்ள ஒரு பெரிய மசூதியையும் இடித்துக் கட்டிடங்களைச் சின்னா பின்னப்படுத்தியது.

ஈரோடு 31-1-48.

இன்று காலையில் கருங்கல்பாளையத்தில் உள்ள ஒரு ரைஸ்மில் அடியோடு உருக்குலைக்கப்பட்டுக் கட்டிடமும் தாக்கப்பட்டது. அதன் பின் பார்க்கிலுள்ள கோரிகள் இடித்துப் பெயர்க்கப்பட்டன. இவ்வேலைகளுக்குப் பிறகு சுல்தான் பேட்டைக்குத் திரும்பிய வெறியர் கூட்டம் மசூதிக்கும் நெருப்பு வைத்து நாலைந்து வீடுகளுக்கும் நெருப்பு வைத்தது. நெருப்பணைக்க வந்த வண்டியையும் தடுத்து, அதன் குழாய்களையும் அறுத்தது. செய்தியறிந்து எஸ். டி. எம்., டி. எஸ். பி. முதலிய போலீஸ் அதிகாரிகளும் உள்ளூர் பல கட்சித் தலைவர்களும் அங்கு வந்தனர். போலீஸ் அதிகாரிகள் கலவரத்தில் ஈடுபட்டிருந்த 9 நபர்களைப் பிடித்துக்கொண்டு கூட்டத்தைக் கலைந்து செல்லுமாறு வேண்டிக் கொண்டனர். பிடிபட்ட நபர்களை விடுவித்தால் தான் நாங்கள் கலைந்து செல்வோம் என்று கூட்டம் கூறவே போலீசாரும் அதற்கு இணங்கி அந்த 9 நபர்களையும் ஜாமீனில் விடுத்தனர்.

ஜவஹரின் கூட்டத்தில் வெடிகுண்டு வைத்திருந்து சந்தேகிக்கப்பட்டுப் பிடிபட்டவன் ஒரு முஸ்லிம் வாலிபன் என்று இன்று வெளிவந்த செய்தி, வெறியர்களின் வெறியை அதிகமாக்கியதென்றே கூற வேண்டும்.

பின் 11 மணியளவில் பிராடி தெருவில் ஒரு முஸ்லிம் மண்டியும், 2, 3 முஸ்லிம் வீடுகளும் ஒரு முஸ்லிம் ஸ்கூலும் ஒரு முஸ்லிம் பெட்டிக்கடையும் நெருப்பு வைக்கப்பட்டன. போலீஸ் அதிகாரிகளும் உள்ளூர்த் தலைவர்களும் கெஞ்சினர். போலீஸ் பலம் இல்லாததைத் தெரிந்து கொண்ட வெறியர் கூட்டம் அதிகாரிகளையே கல்லால் அடிக்கத் தலைப்பட்டது. இக் கல்லடிக்கு அங்கு நின்ற எஸ். டி. எம். டி. எஸ். பி. ஆகியோரும் கட்சிகளின் தலைவர்களும் ஆளாகினர். நிலைமை கட்டுக் கடங்காமல் போகவே போலீசார் எதிரில் நின்ற ஒரு ஆட்டைச் சுட்டும் கூட்டம் கலையாமல் மார்க்கட்டிலுள்ள ஒரு கூரைக்கு நெருப்பு வைக்க யத்தனிக்கும்போது கூட்டத்தை நோக்கி பலமுறை சுட்டனர். இதனால் நால்வர் ஸ்தலத்திலேயே இறந்தனர். எழுவர் படுகாயமடைந்து ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப்பட்டனர். இதன் பிறகும் மதவெறியர்களின் ஆரவாரம் பெருகியது. போலீசாரும், தலைவர்களும் கெஞ்சியும் பயனில்லை. போலீசார் போய்விட்டால் நாங்களும் போய்விடுகிறோம் என்று வெறியர் கூட்டம் கூறவே போலீசார் அவ்விடத்தை விட்டுச் சென்றனர். உடனே மீண்டும் தீ வைக்கும் வேலையில் இறங்கினர். கடை வீதியில் உள்ள 4, 5, ஆரஞ்சுக் கடைகளை உடைத்துப் பழங்கள் சூறையாடப்பட்டன. காவேரி ரோட்டிலுள்ள 4, 5, பெட்டிக் கடைகளும் ஒரு பெரிய பீடித்தொழிற்சாலையும் நெருப்பு வைக்கப்பட்டன. இவற்றை உடனே போலீஸ் பாதுகாப்போடு நெருப்பணைக்கும் வண்டி சென்று முழுதும் நெருப்புக் கிரையாகி விடாமல் தடுத்து அணைத்தது.

மாலையில் பார்க் ரோட்டில் ஒரு பெரிய ஷூ கடை தாக்கப்பட்டு அங்கிருந்த அத்தனை ஷூக்களும் பாதரக்ஷைகளும் சூறையாடப்பட்டன. 4 5, பெட்டிக் கடைகளும் தாக்கப்பட்டு அங்கிருந்த பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டன. 5 மணியளவில் மலபார் ஸ்பெஷல் போலீஸ் வந்துவிடவே, அதிகாரிகள் உடனே 144 உத்தரவைப் பிரகடனஞ் செய்து நால்வருக்குமேல் கூடக் கூடாதென்றனர். இரவு ஊரடங்குச் சட்டத்தையும் பிரகடனஞ் செய்தனர்.

இவ்வுத்தரவுகள் இருந்தும் இங்கிருந்து 3 மைல் தொலைவிலுள்ள பெரியக்கிராகாரத்தில் இரவிலேயே நான்கு பெரிய தோல் ஷாப்புகள் நெருப்பு வைக்கப்பட்டு, லாரிகள் செல்லாவண்ணம் பாதைகளில் பெரும் பாறாங்கற்களும் தண்டவாளங்களும் கொண்டு தடுத்துக் குறுக்காட்டப்பட்டது. இங்குதான் அதிகமான பொருள் நஷ்டமெனலாம். இதுவரை குறைந்தது சுமார் நான்கு லட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருள்கள் நாசமடைந்திருக்க வேண்டுமென்று மதிப்பிடலாம்.

[தொடர்ச்சி 11ம் பக்கம்]

# காந்தியார் இடத்தை நிறைவு செய்ய, இந்த நாட்டில் எவருமே இல்லை.

★

## பெரியார் அறிக்கை.

திருச்சி ஜன. 31—

தோழர் காந்தியார் கொலையுண்ட செய்தி கேட்டு, திராவிடர் கழகத் தலைவர் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் அடியிற்கண்ட அறிக்கையை விடுத்துள்ளார்கள்:

பெரியார் காந்தியவர்களின் விசனிக்கத் தக்க திடீர் மறைவு என்னைத் திடுக்கிட வைத்தது. இந்திய மக்களனைவரையுமே இந்நிகழ்ச்சி திடுக்கிட வைத்திருக்குமென உறுதியாக நம்புகிறேன். கடந்த கால் நூற்றாண்டுகளுக்கு மேலாகவே, தோழர் காந்தியார் இப்பரந்த உபகண்ட மக்களின் எதிர்கால வாழ்வுக்கு வழி காட்டியாயிருந்து வந்தார்; மக்களுக்கு அவரது தொண்டு மகத்தானது. அவரது லட்சியக் கோட்பாடுகள் உலக மரியாதையினை யேற்று விட்டன.

காந்தியார்மீது நடத்தியிருக்கும் மோசமான தாக்குதல் கண்டனத்துக்குரியதாகும். பல திறப்பட்ட எல்லா வகுப்பு மக்களுக்கும் நியாயமாகவும் பாரபட்சமற்ற முறையிலும் நடந்து கொண்ட காந்தியார் இக்கொடுந்தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கிறார்களென்றால், இது மிகவும் வெறுக்கத்தக்கதாகும். இக்கொலையாளியை ஆட்டிப் படைக்கும் சதிகாரக் கூட்டமொன்று திரைமறைவில் வேலை செய்து வர வேண்டும். வட இந்தியாவில் நடைபெற்றுவரும் கலவரங்களுக்கெல்லாம் அடிப்படை காரணமாயிருப்பது மதவெறியேயாகும். காந்தியாரின் இடத்தை நிறைவு செய்பவர் இந்நாட்டில் எவருமே இல்லை. மக்கள் தங்களது அரசியல், மத வேறுபாடுகளை மறந்து, சகோதர பாவத்துடன் நடந்து கொள்வதே நாம் காந்தியாருக்குச் செய்யும் மரியாதையாகும்.

தென்னாட்டுத் திராவிடர்கள் இயல்பாகவே நாட்டில் அமைதியும் சமாதானமும் நிலவ வைப்பர்.

# தனிப்பட்ட வெறியனின் செயல் அல்ல

★

பெரியார் காந்தியாரைக் கொன்ற மாபாதகனைக் குறித்துக் காங்கரஸ் தலைவர்கள் கூறியவைகள்:—

அந்த மனிதனையோ அவரது செய்கையையோ தனிப்பட்ட விஷயமாகக் கருத முடியாது. கடந்த சில மாதங்களாகத் தேசத்தில் தலைவிரித்தாடிய பலவிதத் தீய சக்திகளின் விளைவே அது.

—பண்டிதர் நேரு.

சில நபர்களும், ஸ்தாபனங்களும் அபாயகரமான நடவடிக்கைகளில் இறங்கியுள்ளனர்.

—சர்தார் பட்டேல்.

காந்திஜீ உபதேசித்ததுதான் உண்மையான இந்து மதம். இந்து மதத்தின் ரட்சகர்கள் என்று கூறிக்கொள்ளுபவர்கள் தங்கள் நடவடிக்கையால் அதன் பிரேதத்தைத்தான் காப்பாற்ற முடியுமே தவிர அதன் ஆன்மாவைக் கொன்று விடுவார்கள்.

—ஆச்சார்ய கிருபளானி.

காந்திஜீ கொலை செய்யப்பட்டது ஒரு தனிப்பட்ட வெறியனின் செயல் அன்று என்பதும் சூழ்நிலை முழுவதையுமே மாற்றவேண்டும் என்பதும் முதலாவது விஷயம்.

—மௌலானா ஆசாத்.

ரோஜா முத்தையா

## எனது விண்ணப்பம்.

★

திராவிட மக்கள் எப்படிப்பட்ட நிலையிலும் அமைதியுடனும், சகிப்புத்தன்மையுடனும் நடந்து கொள்ளவேண்டும்.

—பெரியார் ஈ. வெ. ரா.


# குடி அரசு

7—2—48 சனிக்கிழமை.


## காந்தியார் முடிவு.

★

"உலக மக்களுக்குத் தொண்டாற்றுவதற்கு ஆக 125 வயது வரை நான் உயிருடன் வாழ்ந்து வருவேன்" என்று கூறிக் கொண்டே, அதற்கு ஏற்ற வண்ணம் உடலையும் பாதுகாத்துக் கொண்டே, பெருவாரியான மக்களின் போற்றுதலையும், பாராட்டுதலையும் பெற்று அதற்கு ஆக உண்மையாய் உழைத்து வந்த மகான் காந்தியார், தனது 79ம் ஆண்டில் அகால மரணத்தால் முடிவெய்தி விட்டார்.

இவரது முடிவைப் போல் கேட்டதும் மக்களுக்குத் திடுக்கிடும் தன்மையும், அலறிப்பதறித் துடிதுடித்துத் துக்கப்படும் தன்மையும் இதுவரை நம் நாட்டிற்கு வேறு எவருடைய முடிவும் தந்ததில்லை என்பதோடு, இப்படிப்பட்ட இவரே இக்கதிக்கு ஆளான பின்பு இனி எவர் எக்கதியானால் தான் என்ன? என்றும் கூறலாம்.

காந்தியார் கொள்கையில் அதிருப்தி கொண்டவர் சிலர் ஏன்-பலர் இருக்கலாம் என்றாலும் அப்படிப்பட்டவர்களும் காந்தியாரிடத்தில் மரியாதையும் அன்பும் வைத்தவர்களாகவே இருந்தார்கள்.

கம்யூனிஸ்ட்டுகளும், சமதர்மவாதிகளும், காந்தியார் கொள்கையில் எவ்வளவு குறை கண்டாலும், அவரிடத்தில் மதிப்பும் மரியாதையும் வைத்தவர்களாகவே இருந்து வந்தார்கள். வெள்ளையர்கள் மீதில் இந்தியர்களுக்கு எப்படிப்பட்ட குரோத மனப்பான்மை ஏற்பட்ட காலத்திலும், வெள்ளையர் அரசாங்கம் காந்தியாரை மதிப்பதிலோ, அவரைப் பாதுகாப்பதிலோ சிறிதுகூடச் சிறிதும் தவறியதில்லை. அனுபவத்திற்கு ஏற்றதோ ஏற்காததோ என்ற கவலையற்று, காந்தியார் தனது வாழ்நாள் முழுவதும்ஒரு இலட்சியவாதியாகவே இருந்த பெரியாராவார். ஆதலால் அவரிடத்தில் சொந்த விருப்பு வெறுப்புக் கொண்டு யாவரும் அவரை வெறுத்ததில்லை.

திராவிடக் கழகத்தாருக்கும்காந்தியாரிடம், அவர் வருணாச்சிரம தர்மத்தைக் காப்பதில் பிடிவாதமான கவலை கொண்டிருக்கிறாரே என்பது தவிர, மற்றக் காரியங்களில் அவருடன் பிரமாதமான முரண்பட்ட கருத்துக்கொண்டிருக்கவில்லை என்பதோடு அவர்கள், "காந்தியார் கூடிய சீக்கிரத்தில் இந்த விஷயத்திலும் சரிப்பட்டு விடுவார்கள்" என்றே கருதி, அதை மாத்திரமே முக்கியமாய்க் காந்தியாருக்கு எடுத்துக் கூறிக் குறிப்பிட்டு வந்தார்கள். இந்துஸ்தானிலிருந்து திராவிட நாடு தனி நாடாகப் பிரியவேண்டும் என்பதிலும் காந்தியாருக்குப் பிடிவாதமில்லாமலேயே இருந்து வந்தது என்றாலும், அவரதுநண்பர்களான மார்வாடிகள், குஜராத்திகளின் தாட்சணியம் காரணமாக மாத்திரமே அது விஷயத்தில் தனது அதிருப்தியைக் காட்டி வந்தார். எப்படி இருந்த போதிலும் திராவிடக் கழகத்தாருக்குள் ஒரு சிலருக்குக் காந்தியார் நட்புப் பெறவும், அவரிடம் தங்கள் கொள்கைக்கு ஆதரவு தேடவும் ஆசை துடித்துக் கொண்டிருந்தது. 1948ம் ஆண்டு முடிவதற்குள் இது விஷயத்தில் ஒரு குறிப்பிடத்தகுந்த மாறுதல் கூட திராவிடக் கழகத்தில் ஏற்படலாம் போல் நிலைமை இருந்தது.

இப்படிப்பட்ட சமயத்தில் ஒரு பார்ப்பனப் பாதகன், மத வெறி காரணமாகக் கொடுஞ் செயல் செய்து தனது ஜாதிக்கே நீங்காப் பழியையும் மாசையும் உண்டாக்கிக் கொண்டான். காந்தியார் எப்படி இருந்தாலும் ஒரு நாளைக்குச் சாகக்கூடியவர் என்பதில் யாருக்கும் அய்யமில்லை. அவர் இளம் வயது உடையவருமல்ல. 80 வயதுடையவராய், உலகப் பெரியாராய், உத்தமராய் வாழ்ந்து விட்டார். அவர் அடைந்த சுகபோகம், ராஜ உபசாரம் என்பவைகள் போதுமானதற்கு மேல் என்றே சொல்லலாம். மற்றஎவருக்கும் இதுபோல் சுலபத்தில் கிடைக்கக் கூடியதல்ல என்றும் சொல்லலாம். அவர் மக்களுக்குச் சொல்லவேண்டியவைகளையெல்லாம் சொல்லி விட்டு அதுபோல் நடந்து காட்டவும் செய்தார். அவர் சாகும் போது அவருக்கு நினைவு உணர்வு இருந்து இருக்குமானால், "கடவுள் என்னை அழைக்கிறார்" என்றுகருதித் திருப்தியுடன் தான் உயிர்விட்டிருப்பாரே ஒழிய, சிறிதும் அதிருப்தியாய் உயிர்விட்டிருக்கமாட்டார்.

என்றாலும், நடந்தது என்ன என்று பார்ப்போமேயானால் அவர் குறிப்பாக எந்த ஜாதி மக்களுக்குப் பாதுகாப்பாக இருந்து வந்து, எந்தஜாதிமக்களை-"பிக்ஷாந்தேஹி" என்கின்றஉஞ்சவிருத்திக் கூட்டமாகஇருந்து வந்தவர்களை-இன்று உயர் வாழ்வில் இருத்தி நாட்டை அவர்களது ஆட்சிக்கும், ஆக்கினைக்கும் உள்ளாக்கிக்கொடுத்தாரோ, அந்த ஜாதியே இன்று அவரை அழித்து விட்டதே என்பதுதான் இதில் ஆத்திரம் கொண்டபரிதாபத்தோடு சிந்திக்கவேண்டியதாயிற்று.

உண்மையில் பிராம்மண (பார்ப்பன) ஜாதி என்பதாக ஒரு ஜாதி, அந்த ஜாதியின் நலனுக்கு ஆக, அதுவும் மற்ற ஜாதிகளை இழித்து அழுத்திக் கசக்கிப் பிழிந்து, தாங்கள் மாத்திரம் நல் வாழ்வு வாழ்ந்தால் போதும் என்கின்ற கருத்துக்கு ஆக மாத்திரம் அல்லாமல், மற்றபடி வேறு எந்தக் காரியத்திற்கும் அந்த ஜாதி உலகத்துக்குத் தேவையே இல்லாத, ஜாதியாகும். அப்படிப்பட்ட ஜாதியை அது ஒழியப்போகும் தருணத்தில் காப்பாற்றி அந்த ஜாதியாருக்குப் பொருந்தாத ஏற்றத்தைத் தந்து நிரந்தரமாய் நல்வாழ்வு வாழ வகையளித்தார். அப்படிப்பட்ட அந்த ஜாதிப்

ரோஜா முத்தையா

பாதகரே, அதற்குப் பிரதி உபகாரமாக இப்படிப்பட்ட பழிபாவத்திற்கு அஞ்சாத மகா பாதகமான காரியம் செய்தார் என்பது இது அவருடைய—அவ்வொருவருடைய செய்கையாக மாத்திரம் ஆகிவிட முடியுமா? ஒரு நாளும் முடியவே முடியாது. இதை "ஜாதி தர்மம்" என்று தான் சொல்ல வேண்டும்.

புத்த தர்மம் கெட்டது யாரால்? சமண தர்மம் கெடுக்கப்பட்டுச் சமணர்கள் கழுவேற்றப்பட்டது யாரால்? மற்றும் பாதகமானதும் வஞ்சனையானதுமாகிய பல கொடுஞ்செயல்கள் புராண காலத்திலும், சரித்திர காலத்திலும் நடந்ததாகக் காணப்படுபவை யாரால் நடந்தவைகள்?

இவை போன்றவைகளைக் கூர்ந்து கவனிப்போமேயானால் காந்தியார் போன்ற பெரியார்கள் பார்ப்பனரால் படுகொலை செய்யப்பட்டது என்பது அதிசயமோ சிறிதும் ஆச்சரியமோ அல்ல என்பதை உணருவோம். இதற்கு ஆக பார்ப்பன ஜாதியை குறைகூறுவது முற்றும் சரியானதாகி விடாது. அவர்கள் தங்கள் சுயநல வாழ்வுக்கு ஆக ஏற்படுத்திக்கொண்டு இருக்கும் மதக் கற்பனைகளே, இப்படிப்பட்ட பார்ப்பனர்களை உற்பத்தி செய்யும் விளை நிலமாக இருந்து வருகிறது. உண்மையிலேயே, மதமாற்சரியம்வகுப்புமாற்சரியம், இனமாற்சரியம் முதலிய துவேஷங்களுக்குப் பார்ப்பன மதம் தவிர மற்றபடி இந்த நாட்டில் வேறுகாரணம் யாராவது சொல்ல முடியுமா? தனிப்பட்ட எந்தப் பார்ப்பனரை நாம் குற்றம் கூறக் கூடும்? என்று கேட்கிறோம்.

நன்றாக ஆழ்ந்து நிதான புத்தியுடன் கூர்ந்து சிந்திப்போமானால் "வெள்ளையன் ஆட்சி கூடாது" "முஸ்லிம் ஆட்சி கூடாது" என்ற உணர்ச்சியை இந்திய மக்களுக்கு ஊட்டவும், அதனால் குரோதம், துவேஷம் ஏற்படவும், அதனால் வெட்டு, குத்து, கொலை, கொள்ளை, நாசம் ஏற்படவும் பார்ப்பன மதம் காரணமல்லாமல் வேறு ஏதாவது கொள்கைகள், திட்டங்கள், ஆட்சி தர்மங்கள் காரணம் என்று யாராலாவது சொல்ல முடியுமா? சொல்லக் கூடுமானால் வெள்ளையன் ஆட்சியும், முஸ்லிம் ஆட்சியும் ஒழிந்தன. இந்துஸ்தான் சுய ஆட்சி பெற்றது என்று சொல்லப்பட்ட பின்பும் இந்து முஸ்லீம் போராட்டம் என்னும் பேரால் இந்த ஒரு ஆண்டுகாலமாக நடந்து வரும் அட்டூழியமான நடத்தைகள் நடப்பதற்குப் பார்ப்பன மதம் காரணமல்லாமல் வேறு காரணம் என்று யாராலாவது எதையாவது சொல்ல முடியுமா?

திராவிட நாட்டில் இதுபோது நடந்துவரும் திராவிடர்—ஆரியர் நாடு பிரிவினைப்போராட்டங்களுக்கும் பார்ப்பன மதம் காரணம்என்பதல்லாமல் வேறு காரணம் ஏதாவது சொல்ல முடியுமா? இப்படிப்பட்ட ஒரு மததர்மம் காந்தியாரைக்கொன்றதில் அதிசயமென்ன? என்று திரும்பவும் கேட்கிறோம்.

பார்ப்பனீய மதக் கொடுமைக்கு திராவிட நாட்டில் எப்படியோ ஒரு விதத்தில் இதுவரை இப்படிப்பட்ட பாதகங்களுக்கு இடமில்லாமல் பலரால் பல காரியங்கள் செய்யப்பட்டு வந்திருக்கிறது என்றாலும், பார்ப்பனர்கள் இனி சும்மா இருக்க மாட்டார்கள் என்றே தெரிகிறது.

இந்த நாட்டில் உள்ள ஒவ்வொரு பார்ப்பனரும் தமது பார்ப்பன மதத்தைக் காப்பாற்றத் தான் அரசியலில் கலந்து கொண்டும், பத்திரிகைகள் நடத்திக் கொண்டும் காந்தியார் முன் ஆஷாடபூதி வேஷம் போட்டுக் கொண்டு தக்ளி சுற்றுவதும், கதர் கட்டிக் கொள்வதும், கோணல் குல்லாயை போட்டுக் கொள்வதும், தேசியக் கொடி பிடித்துக் கொண்டு காங்கரஸ் பித்தர்கள் போல் நடிப்பதுமாய் இருந்து வந்தார்களே ஒழிய, நாட்டுப் பற்றால் என்றோ, மக்களுக்கு விடுதலை ஏற்பட வேண்டும் என்ற விடுதலை வேட்கையால் என்றோ, எந்தப் பார்ப்பனரையாவது அவர்களது எந்த நடவடிக்கைளையாவது சுட்டிக் காட்ட முடியுமா என்று கேட்கிறோம்.

வடநாட்டில் காந்தியாரை வீழ்த்தியதன் பயனாய்ப் பார்ப்பனர்களின் செல்வாக்கு ஒரு அளவுக்கு இந்த நாட்டிலும் இனிக் குறைந்து தான் தீரும் என்பதோடு, இந்து முஸ்லிம் போராட்டமும் பெரும் அளவுக்கு அடங்கித்தான் தீரும் என்பதை உணர்ந்த தென்னாட்டுப் பார்ப்பனர்கள், இங்கு திராவிட மக்கள்மீது அவ்வஞ்சகத் தன்மையைத் திருப்ப இப்போதே துவங்கிவிட்டார்கள் என்றே சொல்லலாம்.

முதலாவதாகத் தென்னாட்டுப் பார்ப்பனப் பத்திரிகைகள் காந்தியாரைச் சுட்டவன் பார்ப்பனன் என்பதை வேண்டுமென்றே மறைத்து, மக்கள் முஸ்லிம்கள் மீதும், காங்கரசுக்கு மாறுபட்ட கருத்துக் கொண்டவர்கள் மீதும் பாயும்படியான மாதிரியில் அயோக்கியத்தனமாக மறைத்தும் திருத்தியும் பிரசுரித்தார்கள். அது மாத்திரமா என்றுபார்த்தால், திராவிடக் கழகத்தார் மீதும் துவேஷம் ஏற்படும்படி இரட்டை அயோக்கியத்தனமாக, "கருப்புச் சட்டைக்காரர்களின் கலாட்டா" என்ற தலைப்புக் கொடுத்து மக்களை அவர்கள் மீது கிளப்பிவிட்டிருக்கிறார்கள். இந்தக்காரியத்தைச் சுதேசமித்திரன் பத்திரிகையே முதன் முதலாக தைரியமாய்க் கையாண்டிருக்கிறது. உண்மையாக இந்த நாட்டில் இந்து, சுதேசமித்திரன் என்ற இந்த இரண்டு பேயாட்டவெறிகிளப்பும் விஷமப் பத்திரிகை இல்லாமல் இருந்திருக்குமானால், இந்த நாடு எவ்வளவோ முன்னேற்றமடைந்து, இந்த நாட்டு மக்கள் எவ்வளவோ அந்நியோன்ய பாவமடைந்து, ஞானமும், செல்வமும், ஆறாகப் பெருகும் நன்நாடாக ஆகிப் பல்லாண்டுகள் ஆகியிருக்கும். இன்றைய கலவரங்களிலும், கேடுகளிலும், நாசங்களிலும் 1000-ல் 999 பாகமும் இல்லாமல் இருந்திருக்கும்.

இப்பத்திரிகைகள் தங்கள் ஜாதியார் செய்யும் அயோக்கியத்தனங்களையெல்லாம் "பொது மக்கள் ஆத்திரம்" என்று போட்டுவிட்டு, (கருப்புச்சட்டைக்காரர்கள் செய்தார்களோ இல்லையோ) கருப்புச் சட்டைக்காரர்கள் நடத்தையைக் குறிப்பிடும்போது "கருப்புச்சட்டைக்காரர்கள் கலாட்டா" என்று போடுவதின் காரணம், அதுவும் இந்தச் சமயத்தில் போடுவதின் காரணம் வேறு என்னவாய் இருக்க முடியும்? இந்த நாட்டுக்கு எப்படிப்பட்ட ஆட்சி ஏற்பட்டாலும் இந்து, சுதேசமித்திரன் என்னும் இந்த இரண்டு விஷ ஊற்றும் ஒழிக்கப்பட்டால் ஒழிய மக்களுக்குத் துவேஷம், குரோதம், வஞ்சகம் என்னும் விஷ நோய்கள் நீங்கப் போவதில்லை என்று உறுதியாய்க் கூறுவோம். இந்தச் சமயத்தில் பார்ப்பனர் செய்யும் அயோக்கியத்தனங்கள் ஏராளமாக இருக்கும் போது அவைகளை மறைத்துச், சுட்டவுன் ஜாதியைக் கூட மறைத்து விட்டு "கருப்பு

சட்டைக்காரர்கள் கலாட்டா'' என்று எழுதுவதானது சர்க்கார் அடக்குமுறையைப் பார்ப்பனர் பக்கம் திருப்புவதை விட்டுக் கருப்புச்சட்டைக்காரர் பக்கம் திருப்புவதற்கல்லாமல் வேறு எதற்கு ஆக இருக்க முடியும்? இந்தப்படி ''செய்த'' மற்ற கூட்டத்தினருக்குப் பெயரைக் கொடுத்து அது பிரசுரித்ததா?

இப்படிப்பட்ட யோக்கியர்கள் உள்ள நாட்டில் எப்படி ஜாதி, வகுப்பு, ஒற்றுமை இருக்க முடியும்? மேலும் மேலும் துவேஷம் பிரிவு, ஏற்படாமல் எப்படி இருக்க முடியும்? மக்களுக்கு வெறி ஏற்பட்டிருக்கும் சமயத்தில் கருப்புச் சட்டைக்காரர் கலாட்டா என்று எழுதினால் அதன் உள் மர்மம் என்னவாய் இருக்க முடியும்?

எனவே பார்ப்பனீய விஷம மதம் அழிபட்டால் ஒழியச் சாந்தியும், சமாதானமும் இந்த நாட்டுக்கு ஏற்படுவது அருமையிலும் அருமையாகத்தான் இருக்கும். கடவுள் இருப்பதாலேயே, மதம் இருப்பதாலேயே இக்கேடுகள் நிகழ்கின்றன என்று நாம் சொல்ல வரவில்லை. உலகில் மற்ற பாகங்களில் உள்ள அளவுக்கு அவை இன்று நன்றாய் இருக்கட்டும். ஆனால் வருணாச்சிரம தர்மப் பிரிவு கொண்ட பார்ப்பன மதம் வேண்டவே வேண்டாம் என்றுதான் சொல்லுகிறோம். அதுஉள்ளவரை நாட்டில் இன்றுள்ள கேடுகள் எல்லாம் இருந்துதான் தீரும்.

பண்டித நேருவும், இராஜகோபாலாச்சாரியாரும் எவ்வளவு தியாகிகளாகவும், யோக்கியர்களாகவும், புத்திசாலிகளாகவும் இருந்தாலும், அவர்கள் இந்த வர்ண தர்மத்தை வைத்துக் கொண்டு எப்படிப்பட்ட நல்லாட்சியைக் கொண்டு வந்தாலும், அதில் காந்தியாருக்கு ஏற்பட்ட கதிதான் இவர்களுக்கும்—ஏன் நமக்கும்கூட ஏற்பட்டுத்தான் தீரும். பார்ப்பன மதம் அவ்வளவு விஷத்தன்மை கொண்ட மதமாகும். ஏன் இப்படிச் சொல்லுகிறோமென்றால் பர்மாவில் சுயராஜ்ஜியம் மக்களுக்கு எவ்வளவோ நன்மைகளைச் செய்து விட்டது. இலங்கையில் சுயராஜ்ஜியம் அவ்விடத்திய மக்களுக்கு எவ்வளவோ நன்மைகளைச் செய்து விட்டது. எப்படிச் செய்ய முடிந்தது என்றால் அங்கு வருணாச்சிரம ஜாதி முறை இல்லை, பார்ப்பான் இல்லை. இந்துக்கள் நாட்டில்—இந்துஸ்தானில் சுயராஜ்ஜியம் வந்து என்ன செய்தது? காந்தியார் உயிரைப் பலி வாங்கி விட்டது. ஏன் என்றால் இங்கு வருண ஜாதியும் பார்ப்பானும் உண்டு. இனியும் என்ன என்ன செய்யப்போகிறதோ இவை? இன்றைய சுயராஜ்ஜிய ஆட்சி மந்திரிகளில்—ஒருவர் மீது மற்றொரு மந்திரி சந்தேகப்பட்டுக் குற்றப்பத்திரிக்கை வாசிக்கிறார். அதாவது போதுமான பாதுகாப்பு முயற்சி எடுத்துக் கொள்ளாததாலேயே உள்நாட்டுக் கலகமும் காந்தியார் கொலை பாதகமும் ஏற்பட்டது என்று பண்டித நேரு பாதுகாப்பு மந்திரி மீது குற்றமேற்படும்படி சொல்லுகிறார். நேருவின் நண்பரும் சமதர்மக் கட்சித் தலைவருமான ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்கள் வெட்ட வெளிச்சமாகவே இதை அதாவது "பாதுகாப்பு மந்திரி (சர்தார் பட்டேல் அவர்கள்) அந்தப்பாதுகாப்பு இலாக்காவுக்குத் தகுதி அற்றவர்'' என்று சொல்லுகிறார். பொதுமக்களும் இந்தக்கொலைக்குச்சர்தார் மீதும் பழிபோட இடமிருக்கிறது என்றே கருதுகிறார்கள். காந்தியாரும் உயிருடன் இருக்கும்போது "எனக்கும் பட்டேலுக்கும் விரோதம் இருப்பதாகக் கருதாதீர்கள்'' என்று சொல்லி அவர் மீது மக்களுக்கு உள்ள தப்பபிப்பிராயத்தை மாற்ற முயன்று இருக்கிறார். சர்தார் பட்டேல் அவர்களும் "காந்தியார் பட்டினியின் போதே செத்து இருந்தால் நன்மையாக இருந்து இருக்கும்'' என்று தனது துக்கச் சேதியில் நுழைத்துச் சொல்லி யிருக்கிறார். இதன் காரணமாய் மந்திரிகளுக்குள்ளும் அபிப்பிராய பேதம் வலுத்து மந்திரி சபையில் மாற்றமோ, கோளாறோ ஏற்பட்டாலும் ஏற்படலாம்.

ஆகவே பண்டித நேரு அவர்களும், ராஜகோபால ஆச்சாரியார் அவர்களும் அவர்கள் விலகுவதற்கு முன்போ, ஒய்வெடுத்துக் கொள்ளுவதற்கு முன்போ, இல்லையானால் இனி இப்படி நேராமல் இருக்கப் பாதுகாப்பு முறைகள் கையாளுவதற்கு முன்போ "காந்தியார் பலியாக்கப்பட்டதின் காரணமாய் இந்து "மக்கள் சமுதாயத்தில் வருணாச்சிரம தர்ம முறை அதாவது பிராமணன் க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன், பஞ்சமன் என்பதான பிரிவு (பிறவி உரிமை) முறை இனி கிடையாது. வருண முறையைக் குறிக்கும் சட்டம், சாஸ்திரம், சம்பிரதாயங்களும் இந்தச்சுயராஜ்யத்தில் இனி அனுஷ்டிக்கப்பட மாட்டாது. இவை ஒழியும்படியாக அவசியமான எல்லா ஏற்பாடுகளும் கையாளப்படும்''

என்று சுயராஜ்ய சர்க்கார் பேரால் ஏற்பாடு செய்துவிடுவார்களே யானால் இந்த நாட்டைப் பிடித்த எந்தவிதமான கேடும், ஒரே அடியாய்த் தீர்ந்துவிடும். இதைச் செய்த உடனே அப்புறம் ஒரு உத்தரவு போட்டு விடலாம். அதாவது "பிறவி ஜாதி முறை எடுபட்டு விட்டதால் இனி இந்த நாட்டில் பிராமணர் பாதுகாப்புச் சங்கமோ, பிராமணர் சேவா சங்கமோ, வன்னிய க்ஷத்திரியர் மகாஜன சங்கமோ, நாடார் கட்சி மகாஜன சங்கமோ, வாணிய வைசியர் சங்கமோ, மருத்துவர் சங்கமோ, அருந்ததியார் சங்கமோ மற்றும், இப்படிப்பட்ட பல பல ஜாதி வகுப்புச் சங்கமோ உள் வகுப்புச் சங்கமோ எதுவும் இனிச் சட்ட விரோதமாகக் கருதப்படும். அதனதன் தலைவர்களும் பிரமுகர்களும் பந்தோபஸ்தில் வைக்கப்பட்டு அவர்கள் சொத்துகளைப் பறிமுதல்செய்யப்படும்'' என்று உத்தரவு போட்டு விடலாம்.

பிறகு நமக்குஎன்னதான்வேண்டும். தானாகவே சமதர்மமும்,பொதுவுடைமையும் தனித்தனி நாடு சுதந்தரமும் தாண்டவமாடும்.

இந்தப்படி சர்க்கார் செய்யாமல் வேறு எந்தவித முயற்சி செய்தாலும் அடுத்த பலிக்கு மந்திரிமார் உள்பட நாம் யாவரும் தயாராய் இருக்க வேண்டியதுதான். இந்த நல்ல சமயத்தில் இதைச் செய்யாமல் இந்து மகாசபை ஒழிக்கப்பட்டாலும் சரி, ரா. சு. சே சபை ஒழிக்கப்பட்டாலும் சரி, மாறுதல் ஒன்றும் ஏற்படப் போவதில்லை என்பது நமது கல்லுப் போன்ற உறுதியாகும்.

திராவிடக் கழகத்தார் முக்கியமாக இந்த சந்தர்ப்பத்தில் தங்கள் மீது எவ்விதமான குற்றமும் குறையும் எவரும் கூறுவதற்கு இடமில்லாமல் அடக்கமாய், அமைதியாய், உண்மையாய், நிரபராதியாய் நடந்து கொண்டு தங்கள் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ள வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறோம்.

# காந்தியாரின் மறைவு.

## "குடி அரசு" ஆபீஸ் அனுதாப விடுமுறை.

★

ஈரோடு, பிப். 3—

பெரியார் காந்தியாரின் துக்ககரமான மரணத்தைக் குறித்து 2—2—48 தேதி திங்கட்கிழமை காலை "குடிஅரசு" உதவி நிர்வாகி தோழர் எம். கே. குகநாதன் தலைமையில் அனுதாபக்கூட்டம் நடைபெற்றது. "குடிஅரசு" ஆசிரியர் புலவர் நா. மு. மாணிக்கம் அவர்கள் மதவெறியனின் படுமோசச் செயலைக் கண்டித்துப் பேசியதுடன் நமது தலைவர் பெரியார் அவர்களின் 31—1—48 தேதிய ரேடியோ சொற்பொழிவை எடுத்துக்காட்டி விளக்கிப் பேசினார்.

பின்னர், அன்று ஆபீஸ் விடுமுறை விடப்பட்டது.

# நம்புவதற்கு ஆளிருந்தால் புளுகுவதற்குப் பஞ்சமா?

★

காந்தியார் உயிர் நீத்த பின் அவரைப் பிழைக்க வைக்கத் தன்னால் முடியும் என்றும், எனவே தன்னை டில்லிக்கு அனுப்பிவைக்குமாறும் சென்னை பிரதமரிடம் ஒரு சாமியார் வேண்டினாராம். அதற்குப் பிரதம மந்திரி அவர்கள் உண்மையில் சாமியாருக்கு அவ்வளவு சக்தியிருக்குமானால் ஏன் சென்னையிலிருந்த வண்ணமே உயிர்ப்பிக்கலாமே என்று பதிலளித்து விட்டார்.

பிறகு சாமியார் கவர்னரைக் கண்டு கேட்க அவர் தம்மால் நம்ப முடியவில்லை என்று சொல்லி விட்டார்.

ஆனாலும் சாமியார் முயற்சி குன்றவில்லையாம். டாக்டர் சுப்பராயன், டாக்டர் அழகப்ப செட்டியார் ஆகியவர்களை நம்பும்படி செய்து—ஏன்? அவர்களும் நம்பியே சாமியாரை விமானத்தில் டில்லிக்கு அழைத்துச் சென்றார்களாம்.

டில்லி சென்றார் சாமியார். காந்தியாரின் கை, கால்களைத் தொட்டார். ஆனால் அவர் உயிர் பெற்று எழவில்லை. அத்துடனாவது சாமியார் புளுகு நின்றதா? என்றால் அதுதான் இல்லை. மேலும் புளுகினாராம் தொண்டையை அறுத்து ஒரு குளிகையைப் போடவேண்டும் என்று. அழைத்துச் சென்ற இரு "பெரியார்" களை யோசனை கேட்டிருந்தால் அதுவும் செய்யச் சொல்லியிருப்பார்களோ? என்னவோ? ஆனால் அங்குள்ளவர்கள் யாரும் அதற்கு இடம் கொடுக்கவில்லை. சாமியாரை வெளியேற்றி விட்டனர். பிழைக்க வைப்பதாகப் புளுகியவர் பிழைக்க வழியின்றி டில்லியிலேயே விடப்பட்டாராம். இங்கு கிடைத்தது போல் அங்கு இரண்டு பேர்வழிகள் அகப்படாமலா போவார்கள் என்ற நம்பிக்கை ஒரு சமயம் சாமியாருக்கு இருக்கலாம் அல்லவா?

மார்ச்சு மாதம் 1-ந் தேதி வெளிவரும்.

ஈரோடு நகர முன்னேற்றத்துக்காகவும்,
ஈரோடு வாசிகளின் நலனுக்காகவும்
உழைக்கும் வாரப்பத்திரிகை.

"ஈரோடு வாசி"

பிரதி திங்கட்கிழமை வெளிவரும்.

ஆசிரியர்:
P. ஷண்முகவேலாயுதம்.

4 பக்கம். விலை அரையணா.

காரியாலயம்:— கச்சேரி வீதி, ஈரோடு.

# உடனே எழுதுங்கள்

★

இந்த வாரக் "குடி அரசு" தலையங்கம் புத்தகவடிவில் அரையணா விலையில் விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன. தேவைக்கு உடனே எழுதுங்கள்.

மானேஜர்,
"குடி அரசு" ஈரோடு.

24—2—48ம் நாள் பௌரணமியில்
கைலாஸ் ஹில்ஸ் ஹெர்ப் (ரிஜிஸ்ட்)
ஒரு டோஸ் உட்கொண்டால்
5-வகையான ஆஸ்த்துமாவும்
சுகமாகும்.
ஆங்கிலம் அல்லது இந்தியில் எழுதுக:
BRAHMACHARI G. DAS
Sri Sidh Brahmacharya
Sewa Ashram,
P. O. Chitrakot, U. P.

(6ம் பக்கத் தொடர்ச்சி)

இங்குள்ள நூற்றுக்கணக்கான பாட்டாளி மக்களான தோல் வேலை செய்வோர் சக்கிலியர் வேலையற்றுத் திண்டாடும் நிலைதான் உடனடியாகக் கண்ட பலன்.

இன்று மாலையில் இவ்வூர்க் காங்கரஸ் கமிட்டியின் மாஜித் தலைவரான தோழர் சித்தையன் அரஸ்ட் செய்யப் பட்டார். ஈரோடு. 1—2—48.

144 உத்தரவை மீறிக் கூட்டமாகக் கூடிய ஒரு வெறியர் கூட்டம் வழியில் வந்த முஸ்லிம்களுக்கு, சாக்கு ஊசியைக்கொண்டும் முட்களைக் கொண்டு காது குத்தும் திருப்பணியைச் செய்யவே இன்று 34 நபர்கள் அரஸ்ட் செய்யப்பட்டார்கள்.

ஈரோடு. 2—2—48.

தீ வைத்தல் கொள்ளையடித்தல் ஆகிய செயல்களில் ஈடுபட்டவர்கள் என்று நம்பப்பட்ட 24 நபர்கள் இன்று அரஸ்ட் செய்யப்பட்டனர்.

ஈரோடு. 3—2—48.

கலவரச் செயல்களில் ஈடுபட்டவர் என்று இன்று, ஒரு நபர் கைது செய்யப்பட்டார்.

4-2-48 க்குப் பிறகும் இதனையொட்டிப் பலர் கைது செய்யப்பட்டு வந்திருக்கின்றனர். ஊருக்குள் எவ்விதக் கலவரமும் இல்லை. நகரப் பிரமுகர்கள் அடங்கிய ஒரு சமாதானக் கமிட்டி நகரம் அமைதி காண்பதற்குப் பெரும் உதவி செய்தது. அமைதியைக் காக்க விரும்பிய போலீஸ் அதிகாரிகளின் திறமையும், எதிர்த்துக் கலவரம் செய்ய விரும்பாத முஸ்லிம்களின் போக்கும், சமாதானக் கமிட்டியுமே இவ்வளவு விரைவில் அமைதியை நிலை நிறுத்தியன என்று கூற வேண்டும். இன்னும் ஊரடங்கு, 144 உத்தரவுகள் அமுலில் இருக்கின்றன.

6-2-48 முதல் போலீசார் ரா. சு. சே. பக்கம் தம் நாட்டத்தை வைத்திருக்கின்றனர்.

ரோஜா முத்தையா

[5ம் பக்கத் தொடர்ச்சி]

சமாதானப்படுத்தும் தம் சொந்த விஷயங்களில் பாதிரியார் தம் கவனத்தைச் செலுத்துவதை விட்டு நாட்டின் சமாதானத்தை குலைக்கக் கூடிய பிரச்னைகளில் தலையிடுவதைக் கண்டு கவர்னர் வருந்துகிறார்'' என்று எழுதினாராம்.

இந்த ஆதரவு நாளடைவில் குறைந்தது. சுதேசிகளின் சந்தேகம் வலுத்தது. 1858-ம் வருடம் விக்டோரியா ராணியார், மத விஷயங்களில் தாம் தலையிடுவதில்லை என்று வாக்களித்தார்.

### முதல் சென்னை நகரசபை.

சென்னை நகர சபையை ஸ்தாபிக்க அனுமதி கிடைத்தது. 1687-ம் ஆு டிசம்பர் 30உ யன்று நத்தேனியல் ஹிக்கின் என்பவர் தான் முதல் மேயராக நியமிக்கப்பட்டார். சட்ட சபையிலிருந்த மூன்று இங்கிலீஷார் மூன்று போர்த்துகீசிய வியாபாரிகள், மூன்று ஹிந்துக்கள் அப்பொழுது 'ஆல்டர்மன்' களாக நியமிக்கப்பட்டனர். இம் மூன்று ஹிந்துக்கள் யார் தெரியுமா? சின்ன வெங்கடாத்திரி, மூட்ட வீரண்ணா, ஆலங்கத்தா பிள்ளை, ஆகியோர் ஆவர். 1688-ம் வருடம் செப்டம்பர் 29-ல் நகர சபை ஸ்தாபிக்கப்பட்டது. முதலில் சாப்பாடு நடந்தது. மாலை 3 மணிக்கு நகரசபை வேலை ஆரம்பமாயிற்று. "சுதேசிப் பிள்ளைகள் இங்கிலீஸ் பாஷையைப் படிக்க, பேச எழுதக் கற்றுக் கொள்ளவும் கணக்குப் பார்க்கத் தெரிந்து கொள்ளவும், பள்ளிக்கூடம் ஒன்று கட்ட, ஒரு ஜெயில், ஒரு டவுன் ஹால் நிர்மாணிக்க நகரசபை வரி விதிக்கலாம்'' என்ற அதிகாரம் நகரசபைக்கு அளிக்கப்பட்டது. மேயரும், ஆல்டர்மன்களும் பெரிய குடைகள் பிடித்துச் செல்லவும், குதிரை சவாரி செய்யவும் அனுமதிக்கப்பெற்றனர். மூன்று ஆல்டர்மன்கள் தாம் நீதிபதிகள்.

### குடி தண்ணீருக்குக் கஷ்டம்.

1718-ம் வருஷத்திலே சென்னைக் கோட்டையிலிருந்தவர்கள் குடி தண்ணீருக்கு லாட்டரி அடித்துக் கொண்டிருந்தார்களாம். பரங்கி மலையிலிருந்து ஒரு பானைத் தண்ணீர் இரண்டு துட்டு வீதம் வாங்கிக்கொண்டிருந்தார்கள். பெத்து நாய்க்கன் பேட்டையில்தான் சில குடிதண்ணீர்க் கிணறுகள் இருந்தன.

1639-ல் சென்னையின் ஜனத்தொகை எழு ஆயிரம். 1791-ல் 1 லட்சம். 1777-ல் ஏழு கிணறு தண்ணீர்த் திட்டம் தயாராயிற்று. ஆனால் தோண்டப்பெற்றவை பத்துக்கிணறுகள். ஒவ்வொரு கிணறும் 16-அடி அகலமும் சுமார் 30- அடி ஆழமு முள்ளது.

### லண்டனுக்கு முன் சென்னையில் டிராம்வே.

லக்ஷம் பவுன் மூலதனத்தோடு, 1893-ல் சென்னை டிராம்வேகம்பெனி ஆரம்பமாயிற்று. லண்டனிலுள்ள ஹிட்சின்ஸ் கம்பெனியாருக்கு டிராம்வே லைன் போட அநுமதிக்கப்பட்டது. 1895-ல் மே மாதத்தில் தான் டிராம்வே உபயோகத்திற்கு வந்தது. அதற்கு ஆறுவருடங்களுக் கப்பால் தான் லண்டனிலும், இந்தியாவின் பிற இடங்களிலும் டிராம் லைன்கள் போடப்பட்டன.

1894-ல் முதன் முதல் ஒரு மோட்டார் சென்னைக்கு வந்தது. 'மவுண்ட் ரோடில் சில கஜ தூரங்கள் ஓடி, 'பக்' என்று நின்று விட்டது அது. 1900-ம் வருஷத்தில் நல்ல மோட்டாராக ஒன்று வந்தது. 1639-ல் சென்னைத் துறைமுகத்தில் வரும்படி 25000 ரூபாய்கள். இப்பொழுது சுமார் நூறு கோடி.

1840-ம் வருடத்தில் அமெரிக்காவிலிருந்து அய்ஸ் வரவழைத்து ஒரு கட்டடத்தில் சேமித்து வைத்து பவுண்டு நான்கணா வீதம் விற்று வந்தார்கள். நல்ல வியாபாரம் நடந்தது. அந்த அய்ஸ் சேமிக்கப்பட்டு வைத்திருந்த கட்டடத்திற்குத் தான் 'அய்ஸ் ஹவுஸ்' என்று பெயர். இன்று அந்த ஹவுஸ், விதவையர் விடுதியாகவும், பள்ளியாகவும் மாறியிருக்கிறது.

முதல் போஸ்ட் மாஸ்டர் ஜெனரல் நியமனம் 1774-ல். அப்பொழுது தான் காகிதங்களுக்குக் காசு கொடுத்து பில்லைகள் தொங்கவிட வேண்டுமென்று உத்தரவாயிற்று. 1791-ல் சென்னை நகரவாசிகள் தாமாகவே சர்க்காருக்கு மகஜர் அனுப்பி தங்களுக்கு வரி விதிக்கச்சொன்னார்களாம்.

1857-ல் சென்னை சர்வகலாசாலை ஆரம்பமாயிற்று. 1859-ல் தான் முதன் முதல் ரயில்வே லைன் போடப்பட்டது. 1862-ல் ஹைக்கோர்ட் ஏற்பட்டது. 1884-ல் மரீனா அமைக்கப்பட்டது. 1899-ல் ஹார்பர் கட்டப்பெற்று முடிந்தது.

முன் காலத்தில் சென்னைத்தெருக்கள் நிரம்ப அலங்காரமாக இருக்குமாம். ஏனென்றால் குலை நடுங்கச் செய்யும் இயந்திர வண்டிகள் அப்பொழுது கிடையாது. ஒரு பெரிய மனிதரென்றால் பல்லக்குகளில் வெளியில் செல்வர். முன்னால் அழகிய தாசிகள் பாடிக்கொண்டு செல்வர்.

1764-ல் முதல் ஜெனரல் ஆஸ்பத்திரி கட்டப்பெற்றது:

1665-ல் சென்னையின் முதல் கவர்னராக இருந்த ஜார்ஜ் பாக்ஸ் கிராப்ட், தனது ஆலோசனை சபையால் தண்டனை விதிக்கப்பெற்று, பதவி இழந்து சிறைவாசம் செய்தார். அதே மாதிரி தான் 1776ல்- பிகாட் பிரபுவும் சிறைப்பட்டு மடிந்தார்.

### அகதீஸ்வரன் பூதேவி தாலியை அறுத்தான்!

சென்னை, பிப். 2-வெள்ளிக்கிழமை யன்று சூளை கொசைப்பேட்டையைச்சேர்ந்த அகதீஸ்வரன் (30-வயது) என்பவன்பேஸின்பிரிட்ஜுக்கு அருகில் ஹரிநாராயணபுரம் என்ற இடத்திலுள்ள ஸ்ரீ ஸ்ரீனிவாசப் பெருமாள் கோவிலில் நுழைந்து பூதேவி கழுத்திலிருந்த தாலியை அறுத்துச் சென்று விட்டானாம்.

கோவில் அர்ச்சகர் தற்செயலாக இதைக்கண்டு கூக்குரலிடவே வெளியிலிருந்தவர்கள் தாலியுடன் ஓடிய மனிதரைப் பிடித்து போலீசாரிடம் ஒப்படைத்தனர். இவன் காவலில் வைக்கப்பட்டிருக்கிறான். வண்ணாரப்பேட்டை போலீஸ் ஸ்டேஷன் சப் இன்ஸ்பெக்டர் பெருமாள் புலன் விசாரணை நடத்தியதில் கோயில்களில் திருட்டு நடத்தியதற்காக ஏற்கனவே அகதீஸ்வரனுக்கு இரு முறை தண்டனை அளிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

### அய்யோ! கடவுளே?

மாயவரம், ஜன. 30-மாயவரம், கும்பகோணம், சீர்காழி தாலூக்காக்களில் அமைந்திருக்கும் கோவில்களில் விக்கிரகங்களைப் புரட்டி அவைகளின் கீழ் ஆகமவிதிகளின்படி வைக்கப்பட்டிருக்கும் பவுன் தகடுகள், விலைஉயர்ந்த கற்களைக் கொள்ளை யடித்து பணம் சம்பாதிக்கும் கூட்டத்தைச் சேர்ந்தவர்களென்று சொல்லப்படுகிற வைத்யநாத கொத்தன், சாரங்கன், சின்னப்னப்பயல் என்கிற ராமசாமி, கிட்டுப்பிள்ளை என்கிற அய்வரையும் மாயவரம் நகர போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் தோழர் தேவதாஸ்மணி நேற்று கைது செய்து மாயவரம் ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர் முன்பாக ஆஜர் செய்யப்பட்டு ரிமாண்டில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். மேற்கொண்டு விசாரணை செய்யப்பட்டு வருகிறது. இது வரையில் ஷை அய்வரும் பிரபல கோவில்களில் 25-க்கு மேல் கொள்ளை அடித்திருப்பதாகத் தெரிகிறது. (ந-நி)

16—2—48 முதல் வெளிவரும்.

'சிந்தாமணி''

திங்கள் இருமுறை தோன்றும்.

நடுநிலைமைத் தமிழ்ச் செய்தி இதழ்.

ஆண்டு சந்தா 3. ரூ. தனிப்பிரதி 2 அணா. விற்பனையாளர்களுக்கு 25/ கமிஷன் தரப்படும். விளம்பர விகிதங்கள் மிகவும் குறைவு.

விபரங்களுக்கு:-சிந்தாமணி நிலயம்,
73. ஜாப்பர்சா தெரு,
திருச்சினாப்பள்ளி.

# யார் நாஸ்திகன்?

(கே. பாலையா)

அண்மையில் நடந்த திருவண்ணாமலை மகாநாட்டில் தலைவர் பெரியார் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவை அன்பர்கள் நன்கு படித்திருப்பர் என்று எண்ணுகிறேன். பல ஆயிரம் ஆண்டுகளுக்கும் முன்னதாக ஆரியர் இந்த நாட்டிற்கு வந்து பொய்ப் புராணங்களும், வேதம், சாஸ்திரங்களும், கடவுள் மதம், மேலுலகம், சொர்க்கம், நரகம் என்னும், பல பொய்க்கதைகளும் கட்டின காலத்திலேயே பல பெரியோர்கள் அந்தக் காலத்திலேயே இவைகள் பொய் என்று எழுதியும், மக்களுக்கு எடுத்துச் சொல்லியும் வந்திருக்கிறார்கள். அதைப்போலவே பெரியார் அவர்களும் மனம் நொந்து மக்களுக்கு கிளிப்பிள்ளைக்குச் சொல்வதுபோல் சொல்லியும் இன்னும் சில மர மண்டைகளுக்கு ஏறுவதில்லை. அதாவது ஒரு வீசை உள்ள செப்புச் சிலையை அய்ம்பது டன் இடையுள்ள விறகில் வைத்து இரண்டாயிரம்பேர் சேர்ந்து இழுத்துக்கொண்டு வருகிறார்களே இதைவிட முட்டாள் தனம் வேறு உண்டா என்று கேட்கிறார்; அது எவ்வளவு உண்மை என்று கொஞ்சம் சிந்திக்கவேண்டுகிறேன்; ஒரு வயதுக் குழந்தை நடந்து பழகும் சிறு வண்டியில் பெரிய இரண்டு மாடுகளைப் பூட்டி ஒரு மிராஸ்தாரனையோ அல்லது ஒரு கடவுள் பக்தனையோ ஊர்வலம் விட்டால், அல்லது ஏறிக் கொண்டு போனால் அதைப் பார்க்கும் பொதுஜனங்கள், அவனைக் கல்லால் அடிக்காமல் இருப்பார்களா? இரண்டாயிரம் பேர் இழுக்கக்கூடிய பெரிய மரக்கட்டையில் ஒரு சிறுவன் தூக்கிச் செல்லும் செம்பை இழுத்துச் செல்வதற்கும், ஒரு குழந்தையின் நடை வண்டியில் காளைகளைப் பூட்டி அதில் ஆள் ஏறி ஓட்டுவதற்கும் ஏதாவது வித்தியாசம் இருக்க முடியுமா? ஊசிவாங்கச் சென்ற சீடப்பிள்ளைகள், வாழைமரத்தில் செருகி தூக்கி வந்ததுக்கும் இதற்குந்தான் வித்தியாசம் உண்டா! ஆகவே தான் அந்தக் காலத்திலேயே பல பக்தர்களால் போற்றிய புகழ் பெற்றவரும் இன்னும் கோவில்களில்கற்சிலையாக நிற்பவருமாகிய சிவவாக்கியர் என்ற முனிவர் பாடி இருக்கிறார், பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாக.

"ஊரிலுள்ள மனிதரெல்லாம்
ஒருமனதாய்க் கூடியே
தேரிலே வடத்தை யிட்டுச்
செம்பை வைத்து இழுக்கிறார்
ஆரினாலும் அறியொணாத
ஆதிசித்த நாதரை
பேதையான மனிதர் பண்ணும்
புரளி பாரும் பாருமே."

என்று மனம் நொந்தல்லவோ பாடி இருக்கிறார். அந்தக்காலத்தில் யாரோ சில விஷமிகள் பொய்க் கதையை மக்களுக்கு நம்பும்படி சொன்ன காரணத்தால்தான் பேதையான மனிதர் என்று சொல்ல நேர்ந்திருக்கிறது. அத்துடன் நின்றாரா சிவவாக்கியர். அன்றுள்ள மக்களுக்கு அதற்கும் முந்தின காலத்தைக்குறிப்பிட்டும் சொல்கிறார் கேளுங்கள்.

"ஆதியுண்டு அந்தமில்லை யன்று
நாலு வேதமில்லை."

என்று சொல்லுகிறார் அத்துடன் விட்டாரா?

"ஆதரித்த மந்திரம்
அமைந்த ஆகமங்களும்
மாதர் மக்கள் சுற்றமும்
மயக்க வந்த நித்திரை"

மக்களை மயக்கும் மயக்க மருந்துக்குச் சமமாகவன்றோ ஆகம காரியங்களைக் கூறுகிறார்.

"........இட்டமான ஓமகுண்டம்
இசைந்த நாலுவேதமும் கட்டி
வைத்த புத்தகம்........"

கட்டுக்கதை என்று அறுதியிட்டுச் சொல்லும் சிவவாக்கியர் நாத்திகரா? பெரியாரைத் தூற்றும் பேதையரே கேளுங்கள்.

"ஓசையுள்ள கல்லை நீ
உடைத்திரண்டாய்ச் செய்துமே,
வாசலில் பதித்த கல்லை
மயங்கவே மிதிக்கிறீர்!
பூசனைக்கு வைத்த கல்லில்
பூவும் நீரும் சாத்துறீர்!
ஈசனுக் குகந்தகல்
எந்தக்கல் சொல்லுமே"

இவை சிவவாக்கியரால் பாடப் பெற்றது என்பதை வாசகர்கள் நினைவில் இருத்த வேண்டுகிறேன்.

பெரியார் அவர்கள் பல கற்களில் பிளந்து எடுத்ததில் உருவமைத்து பூவும் நீரும் சாத்தின மாத்திரத்தில் அதற்கு உயிர் வந்து, அந்தக் கல்லை நம் திராவிடன் தொட்டு விட்டால் மாத்திரம் சாமி செத்து விடும் என்று சொல்லுகிறாயே தம்பி! என்று கேட்டதில் நாஸ்திகனாக்கப் பட்டால், அந்தக் காலத்திலேயே இவைகளை எடுத்துச் சொன்ன சிவவாக்கியர் நாஸ்திகரா?

"பொய் மதங்கள் போதனைசெய்
பொய்க் குருக்கள்" என்று சொல்லும் பாம்பாட்டிச் சித்தர் நாஸ்திகரா?

"உளியிட்ட கற்சிலைக்கு
உண்டோ உணர்ச்சி?
உலகத்தின் மூடர்களுக்குண்டோ
உணர்ச்சி?"

என்று மீண்டும் கேட்கிறாரே நாஸ்த்திகரா?

"சதுர் வேதம் ஆறுவகை சாஸ்திரம் பல தந்திரம் புராணங்களைச்
சாற்றும் ஆகமம்
விதம் விதமான நான வேறுநூல்களும்
வீணான நூல்கள்........."

என்று சொல்லுகிறாரே அதைத் தானே நமது பெரியாரும் சொல்கிறார். 'சாதிப்பிரிவிலே தீமூட்டுவோம்' என்று சொல்லுகிறார் சித்தர். சாதியே வேண்டாம் என்கிறார் பெரியார். அந்தக்காலத்தில் பல பெரியோர்கள் விட்டுப்போன காரியத்தைத்தானே தொடர்ந்து செய்கிறார்கள் திராவிட கழகத்தார்கள். இன்னும் எத்தனை ஆண்டுகளுக்குத்தான் போராட நேருமோ நாமறியோம். அந்தக் காலத்தில் பல பெரியோர்கள் எழுதி வைத்தபல நூல்கள் இன்னும் மறையாமல் இருக்கிறது என்று ஒருவாறு சமாதானம் அடைய வேண்டி இருக்கிறது. இந்த மாதிரி நூல்கள் எத்தனை மறைக்கப் பட்டுப்போனதோ யார் அறிவர்? பெரியாரை நாத்திகன் என்று கூறும் சழக்கரே! இந்நாட்டில் எத்தனை ஆயிரமாயிரம் நாத்திகர் இருந்து இறந்தார்கள் என்பதற்கும் அவர்கள் எவ்வாறு பச்சை நாத்திகராய் இருந்தார் என்பதற்கும் இன்னும் பல ஆதாரங்கள் காட்டுவோம். நாத்திகனென்று தூற்றாதீர்! நன்கு சிந்தியுங்கள்! மயக்கம் தெளியும்!

---

[4ம் பக்கத் தொடர்ச்சி]

டம் ஆடும் உயர்ஜாதி இந்துக்களிடமிருந்து.

இவைகள் யார் ஆட்சியில்? நம்மவர் ஆட்சியில். போதுமா? வேண்டுமென்றால் வேணதுண்டு. அப்லிப்ட் நிர்வாகியே! கனம் கூர்மையாவே! இவைகள் உமது கண் முன்.........!!! இதுவரையிலும் எட்டியிருக்காதா உமக்கு? இதனை எண்ணிப்பார்க்க நேரம் இராது என்றுதான் நினைக்கிறேன். இன்னல்களைப் போக்கி இன்ப வாழ்வடைய வழிசெய்யுங்கள்! ஏழைகளைக் காட்டி, எங்கள் சார்பாக மன்றத்தில் வீற்றிருக்கும் மந்திரிமார்களே! எங்கள் குறைகளைப் போக்க ஆவன செய்யுங்கள்! அடிமை இந்தியாவில்பட்ட அல்லல்களைவிடச் சுதந்தர இந்தியாவில் மிகப் பன்மடங்கு நாங்கள் அனுபவிக்கும் தொல்லை. ஏனோ இந்தச் சுயராஜ்ஜியம்? இக் கேள்வி ஏழை மக்களின் வாயிலிருந்து தோன்றியிருக்கிறது. பெருகுவதற்கு முன்னால் [illegible]

[3ம் பக்கத் தொடர்ச்சி]

கட் இல்லாத பிரயாணிகள் இடத்தை ரிசர்வ் செய்து கொண்டிருப்பதைக் காண்பார்கள். வழியில் வைக்கலாம் என்றாலோ நெடுகப் பலர் நின்று கொண்டிருக்கிறார்கள். இப்படியாகக் கஷ்டப்படுவதைப் பார்த்துக் கொண்டிருப்பதைவிட கண்ணை மூடிக் கொள்வதே மேல் என்று தூங்குவது போலப் படுத்துக் கொண்டே பிரயாணம் செய்ய வேண்டி நேரிட்டது. இடத்திற்காகப் போட்டுக் கொள்ளும் சண்டை எங்கு வகுப்புச் சண்டையாக மாறிக் குழப்பத்தை விளைவித்து விடுகிறதோ என்று பல தடவை நினைக்க வேண்டி ஏற்பட்டது.

உணவு அருந்தவோ, காப்பி, டீ குடிக்கவோ வெளியில் போய் வருவதெல்லாம் ஜன்னல் வழியாகவே தான். இப்படியாகப் பிரயாணம் செய்து கொண்டு போகும் பொழுது நைஜாம் எல்லைக்குள் ரயில் பிரவேசிக்கும் எல்லையில் ஒரு ஸ்டேஷனில் ரயில் நிறுத்தப்பட்டு எல்லா வண்டிகளிலும் போலீஸ் அதிகாரிகள் வந்து பெட்டி, படுக்கையைச் சோதனை செய்தார்கள். எனது பெட்டி, படுக்கையை அப்படியும், இப்படியும் நகர்த்தக்கூட இடமில்லாத நிலையில் எப்படி எல்லாம் எடுத்துக் காட்டுவது என்று தெரியாமல் "எங்கய்யா, கொஞ்சம்கூட இடமில்லையே பெட்டிகளைத் திறந்து காட்டுவதற்கு'' என்று சொன்னேன். எனது தமிழ் சத்தத்தைக் கேட்டதும் அந்த அதிகாரியும் தமிழில் "உங்கள் பெட்டியில் ஒன்றும் ஆயுதம் வகையறா இல்லாதிருந்தால் சரி'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார். அப்பாடா! தமிழில் பேசியதன் பலனைக் கண்டேன். நான் தமிழில் பேசாது—தமிழில் பேசினால் புரியாது என்று கருதி எனது அரைகுறை இங்கிலீஷில் உளறியிருப்பேனேயானால் எனதுபாடு திண்டாட்டமாய்ப் போயிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. வேறு மொழி பேசும் பிரதேசத்தில் தமிழ் பேசும் இருவர் சந்தித்தால் தமிழில் பேசுவதில் அடையும் இன்பம்—பலன் பலஉண்டு என்பதை அறிந்தேன்.

நானும், போலீஸ் அதிகாரியும் தமிழில் பேசிக்கொண்டிருந்ததைப் பார்த்திருந்த மற்றொரு பிரயாணி சிறிது நேரம் கழித்து என்னை நோக்கி "அய்யா! நீங்கள் வைத்திருக்கும் பெரிய புத்தகம் என்ன?'' என்றார். இது குடி அரசு என்னும் வாரப்பத்திரிகையின் ஒரு வருஷத்திய பைண்டு வால்யூம் என்றேன். அதைநான் சொல்லி முடிப்பதற்குள் அவர் அந்தப் புத்தகத்தைத் தனது காணாமற்போன சொந்தச் சொத்தைக் கண்டவர் போல் எனது கையிலிருந்து வாங்கி—இல்லை பிடுங்கி—விடாது பக்கம் பக்கமாக வாசித்து வர ஆரம்பித்து விட்டார். அவர் ஒருமுறை குடிஅரசு வால்யூம் பூராவையும் பார்த்து முடித்த பின்னர் தான் என்னிடம் பேசத் தொடங்கினார். தமிழ் நாட்டு நிலைமை பற்றி வெகு அக்கரையாக விசாரித்துக்கொண்டு வந்தார்.

இவ்வாறாக எனது ரயில் பிரயாணம் கழிந்தது. 25ந் தேதி காலை 6½ மணி சுமாருக்கு தாதர் என்ற ரயில்வே ஸ்டேஷன் போய்ச்சேர்ந்தேன். எனது சாமான்களுடன் நான் கீழே இறங்கி ஒரு பக்கமாக நின்று கொண்டிருந்தேன். ஒரு தோழர் ஒவ்வொரு வண்டியாகப் பார்த்துக்கொண்டு வருவதை நான் பார்த்ததுமே என்னைத்தான் தேடுகிறார்கள் என்று புரிந்து கொண்டு அவரை நான் கூப்பிட்டு "உங்கள் பெயர்தானா பெரிய சாமி?'' என்றேன். அவ்வாறு நான் கேட்டதும் உடனே அவர் விரைந்தோடி தோழர் எஸ். பெரியசாமி அவர்களையும், மற்றுமுள்ள தோழர்களையும் அழைத்து வந்தார். நான் முதன் முதலாக சந்தித்துப் பேசியவர் திராவிட நாடு பகுத்தறிவு நிலையக் கூட்டுச்செயலாளர் தோழர் எஸ். எம். சுப்பய்யா என அறிமுகப்படுத்தப்பட்டது. ஷை நிலையத் தலைவர் தோழர் எஸ். பெரியசாமி அவர்கள் மாலையிட்டு வரவேற்றார். அதன் பின் அங்கு வந்திருந்த தோழர்களான ராஜன், தொல்காப்பியன், வெற்றி அரசு, அற்புதம், சற்குணம் முதலானவர்களை அறிமுகப்படுத்தி வைத்தார்கள். (இன்னும் பல தோழர்களின் பெயர் நினைவுக்கு வராமையால் குறிப்பிட முடியவில்லை.)

தாதர் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து நாங்கள் அனைவரும் மஹீம் என்னும் ஸ்டேஷனுக்கு ரயிலில் போய் தமிழர்கள் வாழும் தாராவி போய்ச்சேர்ந்தோம். (தொடரும்)

(2ம் பக்கத் தொடர்ச்சி)

வீட்டுக்குள் சென்று அரசியாரை எழுப்பி, வந்த செய்தியைச் சொன்னாள்.

அரசியார் அறிவழகியை நோக்கிக் கேட்டது,

"'பெரளி' எண்ணெயா? தருகிறேன், காசு கொண்டு வந்திருக்கிறீர்களா?''

அண்ணாமலை தன் தாயாரை நோக்கி "காசா?'' என்றான்.

இந்த ஓசை வெளியில் நின்ற அன்பரின் செவியில் விழவே "இதோ கொண்டுவந்து விடுகிறேன்'' என்று ஓடினார் அன்பர், அடுத்த தெருவிலுள்ள தம் வீட்டுக்கு.

இனி நமது அரசியாரை 'தாயார்' என்றே குறிப்பிடுவோம்.

அண்ணாமலை தன் தாயை நோக்கி:- "என் காசுகேட்கின்றீர்கள். ஆபத்து என்று கொஞ்சம் எண்ணெய் கேட்டால் உடனே கொடுத்தால் ஆகாதோ? காசை விடிந்து வாங்கிக்கொள்கிறது தானே! எங்கேயாவது ஓடிப் போய் விடுமோ?''

தாயார்:- "டேய், நீசும்மா, இருடா. உனக்கு என்னடா தெரியும்?'' என்று சொல்லிக்கொண்டே ஒரு கரண்டி எண்ணெயை அறிவழகியிடம் கொடுத்தாள். அறிவழகி எண்ணெயை வாங்கிக்கொண்டு, அந்த வீட்டுத் திண்ணையிலேயே உட்கார்ந்து கொண்டாள்.

அண்ணாமலை (தன் நெஞ்சு பதைபதைக்கவே) மறுபடியும் தாயை நோக்கி: "அவசரம் என்றால் இப்படி காக்க வைக்கிறீங்களே! இதற்கு சாத்திரம் என்ன பார்க்கவேண்டியிருக்கு? உடனே எண்ணெயைக் கொண்டு போகச்சொல்லேம்மா'' என்றான்.

இன்னும் அன்பர் காசுகொண்டுவரவில்லை.

தாயார்:- அறிவழகியைப் பார்த்து, "எனக்குக்கூடத் தெரியாது, பெரியவங்க எல்லாம் இப்படித்தான் சொல்றாங்க, மருந்து பண்டம் ஏதாவது ராத்திரியிலே கேட்டா, காலணாக் காசாவது வாங்கிவிட்டு கொடுக்கணும் என்று. சரி, காசு எடுக்கப்போனவர் வர நேரமாகும்போலிருக்கு. எண்ணெயை நீங்க எடுத்துக்கொண்டு போங்க. குழந்தைக்கு உடம்பு என்ன செய்யுதோ!'' என்றுகூறி முடித்தாள்.

இதற்குள் அன்பர் காசுடன் திரும்பி வந்து காலணா காசைக் கொடுத்துவிட்டு எண்ணெயை எடுத்துக்கொண்டு அறிவழகியுடன் அகன்றார் அவ்விடத்தைவிட்டு.

அண்ணாமலை தன் வீட்டு வாயிற்கதவை மூடிவிட்டுத் தாயாரை நோக்கி "எம்மா, நாம் ஒருவர் வீட்டுக்குப் போய் ஆபத்து என்று அவசரமாகக் கொஞ்சம் எண்ணெய்கேட்டால், அவர் அதை வைத்துக்கொண்டே, நம்ம

மாதிரி ஆபாசமான வார்த்தைகளைக் கூறிக்கொண்டே காலதாமதம் செய்தால் நமக்கு எப்படி, இருக்கும்?''

தாயார்:- ''எண்ணெய்க்கு விலையையா நான் கேட்டேன். ராத்திரியிலே கொடுக்கிற, அதுவும் குழந்தைக்குக் கொடுக்கிற மருந்துப் பண்டத்தை சும்மா கொடுத்துவிடக் கூடாது, காலணா காசாவது வாங்கி விட்டுப் பிறகு தான் கொடுக்கணும்னு பெரியவங்க எல்லாம் தெரியாமலா சொல்றாங்க.''

அண்ணா:- ''ஆமா, ஆமா! சும்மா கொடுத்தால் நம்ம வீட்டில் இருக்கிற சீதேவி, அவங்க வீட்டுக்கு ஓடிப்போய் விடும்!''

தாயார்:- ''வாயை மூடிக்கொண்டு போய் படு போடா! மகா தெரிஞ்சவன் இல்லே இவன்''

இருவரும் பேசும் ஓசையைக் கேட்டு தூங்கிக்கொண்டிருந்த மணியம்மை, நாகம்மை (அண்ணாமலையின் தங்கைகள்) இருவரும் எழுந்து கொண்டு ''என்ன அம்மா இது. சத்தம் இந்நேரத்திலே''

தாயார்:- ''இந்தப்பயல் ஒரு படிச்ச முட்டாள். வர வர இவனுக்கு மூளை கெட்டுப்போகுது. ராத்திரியிலே மருந்து பண்டம், பேர் சொல்லாதது (வசம்பு) மூணாவது (சுண்ணாம்பு) இந்த மூன்றும் யார் கேட்டாலும் தாக்கூடாது என்று பெரியவங்க தெரியாமலா சொல்லியிருக்கிறாங்க' நீங்களும் இது மாதிரி யாராவது வந்து ராத்திரியிலே கேட்டால் கொடுத்துவிடாதீங்க. சொல்லியிருக்கிறேன்!''

அண்ணா:- ''அம்மா, உங்கள் பாடத்தை உங்கள் பிள்ளைகளுக்கும் நன்றாய்க் கற்றுக் கொடுங்கள். சீக்கிரம் முன்னேற்றமடையலாம்!''

தாயார்:- நீ மூடுடா வாயை. நான் என்னமோ சொல்லுவேன், உன்னை யாருடா கேட்டா?''

உப்பு, ஊசி, நெல்லிக்காய் இவைகளின் பெயர்களைக்கூட .இரவில் சொல்லக்கூடாது என்ற இழிவான நம்பிக்கையை உடையவள் இத் தாயார்.

சமூகத்தின் சீரழிவை எண்ணி அண்ணாமலையின் மனம் மிகவும் வருந்தியது. சீர்திருத்த செம்மல், சமூகப் பெருந் தொண்டர் 'பெரியார்' அவர்களது உருவம் அவன் மனக்கண் முன் தோன்றியது. 'வாழ்க பெரியார்' என அவன் வாய் வாழ்த்துக் கூறியது. முன்னேற்றத்திற்கு முட்டுக் கட்டையாயிருக்கும் மூடநம்பிக்கைகளுக்கு சாவுமணியடித்தாலொழிய நம் சமூகம் முன்னேற்றமடைய முடியாது என்று எண்ணினான் அண்ணாமலை.

ஆம், ஆம் என்று சொல்வதுபோல அருகிலுள்ள மாதா கோவிலில் மணி இரண்டு அடித்தது.

''ஒழிக! மூடநம்பிக்கை''

# சீன தேசத்தின் :: :: சுதந்தரப் போர்.

(மயிலை. சீனி வேங்கடசாமி)

★

1911-ஆம் ஆண்டின் கடைசியில் சீனா தேசம் குடி அரசு நாடாக மாறி விட்டது. இதற்கு முன்பு சீனா தேசத்தை மன்சூ வம்சத்து அரசர்கள் அரசாண்டு வந்தார்கள். அவர்கள் ஆட்சியில் மக்களுக்கு நன்மை உண்டாகவில்லை. அரசாங்கமும் பலமுடையதாக இல்லை. பலவீனமான அரசாங்கம் சீன நாட்டைச் சீர்குலைத்து விட்டது. இந்தப் போக்கு வெகுவிரைவில் தேசத்தையே பாழாக்கிவிடும்போல இருந்தது. இதை அறிந்த சன்-யாட்-சன் என்னும் அறிஞர், சீன நாட்டை அழிந்துவிடாதபடி பாதுகாத்து அதை உயர்நிலைக்குக் கொண்டுவர முயற்சி செய்தார். அக்காலத்தில் அவர் அமெரிக்கா தேசத்துக்கு அருகில் உள்ள மேற்கு இந்தியத் தீவுகள் ஒன்றில் வசித்து வந்தார். அங்கே ஹானலூலு என்னும் பட்டணத்தில் ஸிங்-சுங்-ஹுய் என்னும் சங்கத்தை ஏற்படுத்தினார். சீன தேச முன்னேற்றச் சங்கம் என்பது இதன் பொருளாகும். சன்-யாட்-சன் நாற்பது ஆண்டுகளாகச்சீன தேசத்தின் முன்னேற்றத்திற்காக அல்லும் பகலும் உழைத்தார். ஆகவே, இவர் சீன நாட்டின் தந்தை என்று அழைக்கப்படுகிறார்.

*　　*

அக்காலத்தில் சீன தேசத்துக்குச் சொந்தமான ஹாங்காங், பர்மோசா, இந்து சீனா, கொரியா முதலிய இடங்களை அய்ரோப்பியரும், ஜப்பானியரும் கைப்பற்றியிருந்தார்கள். இது சீன மக்களை விழிப்படையச் செய்தது. மேல் நாட்டாரின் துப்பாக்கி, பீரங்கி, புகைக்கப்பல் முதலியவைகளைவிட தமது சீன நாட்டு ஆயுதங்கள் பலம் குறைந்தவை என்பதையும், அரசாங்கமும் பலவீனமடைந்திருக்கிறது என்பதையும் மக்கள் நன்கு தெரிந்து கொண்டார்கள். ஆகவே, மன்சு ராஜ குடும்பத்தை ஒழித்து முடி ஆட்சியை அகற்றிக் குடியாட்சியை நிறுவி சீன நாட்டைப் பலப்படுத்தி முன்னேற்றமடையச் செய்ய வேண்டுமென்று சீனமக்கள் பலர் கருதினார்கள். இப்படிப்பட்ட காலத்தில் தான் சன்யாட்சன் மேற்சொன்னபடி சங்கத்தை ஏற்படுத்தினார். இவர் ஏற்படுத்திய சங்கத்தின் நோக்கம் என்னவென்றால், தார்த்தார் (மன்சு) அரசாட்சியை அப்புறப்படுத்தி, சீன தேசத்தை மீட்டுக்கொண்டு, ஜனநாயக ஆட்சியை அமைத்து நிலபுலங்களை ஜனங்களுக்கு உரிமைப்படுத்துதல் என்பதாகும்.

*　　*

அக்காலத்தில் ஜப்பான் தேசத்தில் தங்கிக் கல்வி கற்றுவந்த சீனதேசத்து மாணவர்கள் ஒன்று சேர்ந்து ஹுவா-ஸின்-ஹுய் என்னும் சங்கத்தை ஏற்படுத்தினார்கள். இதன் அர்த்தம் என்னவென்றால், ஜப்பான் தேசத்தில் இருக்கிற சீன மாணவர் சங்கம் என்பது. இந்தச் சங்கத்தின் நோக்கமும், சன்யாட்சன் நிறுவிய சங்கத்தின் கொள்கையையுடையது. அன்றியும், பேர்போனசீனப்புலவரான சான்-டாய்-யன் என்பவர் தலைமையில் குவான்-பூ-ஹுய் என்னும் படித்தவர் கழகமும் ஏற்பட்டிருந்தது. இக்கழகத்தின் நோக்கமும் சீன தேசத்தை முன்னேற்ற வேண்டும் என்பதே. பிற்காலத்திலே, 1905-ஆம் ஆண்டில், இந்த மூன்று சங்கங்களும் ஒன்றாக இணைக்கப்பட்டு துங்-மெங்-ஹுய் (புரட்சியாளர் அய்க்கிய சங்கம்) என்னும் சங்கமாக நிறுவப்பட்டது. இந்தப் புரட்சியாளர் அய்க்கிய சங்கம் தான் பிற்காலத்தில், குவோ-மின்-டாங் என்னும் பெயருடைய சங்கமாக மாறி, இப்போது சீன நாட்டின் தலைவராக இருக்கும் சியாங்-கே-ஷேக்கின் கையிலும், பணக்காரர் ஆதிக்கத்திலும் இருந்து வருகிறது.

*　　*

மேற்சொன்ன சங்கக் கொள்கைகள் பொது ஜனங்களிடம் செல்வாக்கு அடைந்தன. இந்த இயக்கம் பொது மக்கள் இயக்கமாக மாறி நாட்டில் நல்ல செல்வாக்குப் பெற்றிருந்தது. ''தார்த்தாரி (மன்சு) அரசு ஒழிக, சீன தேசம் வாழ்க'' என்னும் ஒலி எங்கும் கேட்டது. இந்த இயக்கத்தைக் கண்டு அரசாங்கம் அஞ்சிற்று. 1901ல் சீன அரசாங்கமும் அப்போது அரசியாயிருந்த இராணியும் இந்த இயக்கத்தை வேறு பக்கமாகத் திருப்பி விட்டு தப்பித்துக் கொண்டனர். அரசாங்கம், ''அன்னியர் (வெள்ளையர்) ஒழிக, ராஜ குடும்பம் வாழ்க'' என்று கூவும்படி ஜனங்களைத் தூண்டி விட்டது. இதன் பலனாக வெள்ளையர் தாக்கப்பட்டனர். ஆனால் இந்த இயக்கத்தை வெள்ளையர் விரைவில் அடக்கி விட்டனர். (சீன அரசாங்கம் மக்களின் ஆவேசத்தைத் தங்கள்மேல் பாயாதபடி வேறு இடத்தில் திருப்பியது போல, இப்போது, பொதுவுடை

ரோஜா முத்தையா

மைக் கட்சியை இந்தியாவில் தேசியப் பணக்கார அரசாங்கம் தங்களுக்குச் சாதகமாகப் பயன் படுத்திக் கொள்ளுகிறதை வாசகர்கள் நினைவு படுத்திக் கொள்க)

* *

1905-ஆம் ஆண்டில் ஜப்பான் தேசம் ருஷியா தேசத்துடன் சண்டை செய்தது. அக்காலத்தில் ருஷியாவை ஸார் என்னும் அரச குடும்பம் ஆட்சி செய்து கொண்டிருந்தது. ருஷிய—ஜப்பான் போரில், ஜப்பான் வெற்றி பெற்றது. ஸார் அரசன் தோல்வியடைந்தான். இது உலக மக்களை விழிப்படையச் செய்தது. ஏனென்றால், அய்ரோப்பிய நாடுகளுடன் ஆசிய நாடுகள் போர் செய்து ஜெயிக்க முடியாது என்கிற மூடநம்பிக்கை அக்காலத்தில் எல்லோரிடத்திலும் இருந்தது. ஆசிய நாடாகிய ஜப்பான், அய்ரோப்பிய நாடாகிய ருஷியாவைத் தோற்கடித்து வெற்றிக் கொடி நாட்டியதைக் கண்டு உலக மக்கள் விழிப்படைந்தனர். முக்கியமாக, ருஷியாவுக்கும் ஜப்பானுக்கும் அருகில் இருக்கிற சீன மக்களுக்குப் பெரிய விழிப்பை உண்டாக்கிற்று. முக்கியமாக உளுத்துப் போய் பலவீனப்பட்டிருந்த சீன அரசாங்கத்தின் கண்களைத் திறக்கச் செய்தது. சீன அரசன் பழைய போக்குகளை மாற்றிச் சில சீர்திருத்தங்களை உண்டாக்கினார். பாடசாலைகளைப் புதிய முறையில் அமைத்தார். புதிய முறையில் சேனைகளைப் பழக்கினார். ஆயுதசாலைகளையும் கப்பல் கட்டும் சாலைகளையும் ஏற்படுத்தினார். அரசியலை வகுக்கப் பார்லிமெண்டு சபையையும் நிறுவினார். இவைகளை எல்லாம் அரசர், தம்முடைய ஆதிக்கத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்குச் செய்தாரேயன்றி மக்களின் நன்மைக்காக அல்ல. இதைப் பொது ஜனங்கள் நன்கறிந்திருந்தார்கள்.

* *

சன்யாட்சன் கருத்து நாடெங்கும் பரவிற்று. கல்லூரிகளிலும் பாடசாலைகளிலும் புரட்சிக் கருத்துகள் பரவலாயின. நாடெங்கும் சங்கங்கள் இரகசியமாக நிறுவப்பட்டன. வெளிநாடுகளில் இருந்த சீனர்கள் இந்த இயக்கத்திற்குப் பொருள் உதவி செய்தார்கள். வாலண்டியர் சேனை அமைக்கப்பட்டது. துங்-மெங்-ஹூய் சங்கத்தின் உறுப்பினர்கள் பலர் நாட்டின் நலத்திற்காக இரத்தத்தைச் சிதறினர். பலர் உயிரைக் கொடுத்தனர். சீன அரசாங்கத்தின் அடக்குமுறை பலமாக இருந்தது. சன்யாட்சன்னுடைய தலையைக் கொண்டுவருபவருக்கு ஆயிரக்கணக்கான ரூபாய் பரிசளிப்பதாக விளம்பரம் செய்யப்பட்டது. பலத்த போராட்டம் நடைபெற்றபின்னர், உலகத்தில் எங்கும் நிகழ்கிறபடியே 1911-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 10ம் தேதி சீன நாட்டின் முடி அரசு ஒழிந்தது. சீனா குடி அரசாக மாறியது.

* *

முடிஅரசு ஒழிந்து குடிஅரசு ஏற்படுத்தப்பட்டது. குடிஅரசின் தலைவராக யுவான்-ஷிக்-ஆய் என்பவர் நியமிக்கப்பட்டார். இவர் தானே சக்கரவர்த்தியாகவரவேண்டுமென்று முயற்சி செய்தார். அன்றியும் நாட்டில் பேராசை, லஞ்சம், யதேச்சாதிகாரம் முதலிய தீமைகள் இருந்தன. குடி அரசு இந்தப்புதிய தொல்லைகளையெல்லாம் அடக்கிச் சமாளிக்கவேண்டியிருந்தது. பணக்கார முதலாளிகளின் யதேச்சாதிகாரத் தொல்லை அதிகமாயிருந்தது. இத்தகைய உள்நாட்டுக் குழப்பங்கள் ஏற்பட்டன. இவ்வாறு ஏற்படுவது, எந்நாட்டிலும் எக்காலத்திலும் உண்டாகிற இயற்கை என்பது சரித்திரம் உணர்த்துகிறது.

* *

சீன நாட்டுச் சுதந்தரப் போராட்டத்தில், சீனப் பொதுவுடைமைக் கட்சியாரும் சேர்ந்து தீவிரமாக உழைத்தனர். சன்யாட்சன் காலஞ்சென்ற பிறகு, குவோமின் டாங் என்னும் சபையில் முதலாளிமார்களும் பணக்காரர்களும் அதிகமாகச் சேர்ந்து அதைத் தம் வசப்படுத்திக் கொண்டனர். சீனப் பொதுவுடைமைக் கட்சிக்குஅதில்இடமில்லாதபடிசெய்து விட்டனர். 1927ல் இருந்து இப்போது சீன நாட்டின் தலைவராக இருக்கும் சியாங்கேஷேக் பொதுவுடைமைக் கட்சியை ஒழிக்கக் கங்கணங் கட்டிக் கொண்டார். கம்யூனிஸ்ட் கட்சியினர் பலரைக் 'கொலை செய்தார். சீனப் பொதுவுடைமைக் கட்சிக்கும் சியாங்கே ஷேக் சேனைக்கும் பல பெரிய போர்கள் நிகழ்ந்தன. சீனநாட்டு முதலாளிகளும், பணக்காரர்களும், அமெரிக்கா தேசமும், பிரிட்டனும் சியாங்கெஷேக்குக்குப் பணவுதவியும், ஆயுத உதவியும் செய்தார்கள். இவ்வாறு சீன தேசம் குடிஅரசு நாடாகியும் உள்நாட்டுக் குழப்பத்தில் ஈடுபட்டு இருக்கிறது. இந்த உள்நாட்டுப் போரினாலும் குழப்பத்தினாலும் சீனதேசம் சீர்குலைந்து விட்டது.

* *

குவோமின் டாங் சபையும், சியாங்கேஷேக்கும் ஆக்க வேலையைச் செய்து நாட்டை முன்னேற்றம் செய்ய முற்படாமல் சீனநாட்டில் பொதுவுடமைக் கட்சியை அழிக்கவேண்டும் என்னும் ஒரே கொள்கையை மட்டும் மனதில் கொண்டிருக்கிறார்கள். சியாங்கே ஷேக்கும், குவோமின்டாங் சபையும் சீனப் பொதுவுடமைக் கட்சிக்குக் கூறுவது என்னவென்றால், சீனப்பொதுவுடமைக் கட்சிக்காரர் தமது சேனைகளையும் பட்டாளங்களையும் கலைத்துவிட வேண்டும் என்பது தான். இதற்குச் சீனநாட்டுப் பொதுவுடமைக் கட்சி சொல்லுகிறபதில் என்னவென்றால், குவோமின்டாங் சபையும், பொதுவுடமைக் கட்சியைப் போல ஒரு கட்சியாகும். உங்கள் கட்சிக்குப் பட்டாளமும் சேனையும் இருக்கும்போது எங்கள் கட்சிக்கும் சேனையும் பட்டாளமும் ஏன் இருக்கக்கூடாது? உங்கள் சேனையைக் கலைத்து விட்டால் நாங்களும் எங்கள் சேனையைக்கலைத்துவிடுகிறோம். சீன தேசத்துக்கு, எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த ஒரு அரசாங்கத்தை ஏற்படுத்திக்கொள்ளலாம் என்கிறார்கள். சியாங்கேஷேக் இதை ஒப்புக்கொள்ள மாட்டேன் என்கிறார். ஆகவே போர் நடந்துகொண்டேயிருக்கிறது. நாடு ஆக்கவேலையின்றிப் பாழாகிக்கொண்டிருக்கிறது. இந்தச் சண்டைக்கு அமெரிக்காவிலிருந்து பணம் குவோமின்டாங் சபைக்கு அனுப்பப்பட்டு வருகிறது. இந்தப் பணம் நாட்டின் நன்மைக்காக உபயோகப்படுத்தப்படவில்லை. சுயநல அரசியல் சமயசஞ்சீவிகள் கையில் மாயமாய் மறைந்து விடுகிறது. சீனா, அமெரிக்காவுக்குக் கடன்காரனானது தான் மிச்சம்.

* *

இப்போது சீனாவில் முக்கியமாக இரண்டே கட்சிகள் உள்ளன. ஒன்று சீனநாட்டுப் பொது உடமைக் கட்சி. இது வடபாகத்தில் செல்வாக்குப் பெற்றிருக்கிறது. மற்றொன்று குவோமின்டாங் கட்சி. இது இப்போது முதலாளிகள் பணக்காரர்கள் கையில் சிக்குண்டு இருக்கிறது. சீன நாட்டுப் பொது மக்களோ பரம ஏழைகள். 100-க்கு 85 பங்கு குடியானவர்கள்; தொழிலாளிகள். வட்டிக் கடைக்காரர்களும் நில முதலாளிகளும் இவர்களைக் கசக்கிப் பிழிந்து இரத்தத்தை உறிஞ்சிவிடுகிறார்கள். இவர்களுக்காகப் போராடுகிறது சீன நாட்டுப் பொது உடமைக் கட்சி. முதலாளிகள் பணக்காரர்கள் சார்பில் குவோமின்டாங் சபை சார்ந்து நிற்கிறது. குவோமின்டாங் சபையைச் சேர்ந்தவர்களில் சிலர் நல்லெண்ணம் உடையவர்கள். பொது ஜனங்களின் நன்மையில் கருத்துள்ளவர்கள். ஆனால், இவர்களுக்கு இங்கு செல்வாக்கு இல்லை. சீன தேசம் குடி ஆட்சியாக மாறிவிட்டது. ஆனால், சீன குடியாட்சியில் முதலாளிகளுக்கு அதிகாரமா? பொது ஜனங்களுக்கு அதிகாரமா? என்பதை நிர்ணயிப்பதற்காக இப்போது உள்நாட்டுப் போர் நடைபெறுகிறது. முடிவு எப்படியோ?

Edited, Printed and Published by N. Karivaradaswamy at the Tamilian Press 42, Cutchery street, ERODE